ஸ்ரீ

லோகோபகாரி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்

மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - க௦.] மன்மதஞு பங்குனிமீ . [எண் - ௫.

வேதாகமப்பிரகரணம்.

யஜுர்வேத சம்பந்தமான

பிரம்மோபநிடதம்.

సహనావవత్వితి శాంతిః.

ఓమ్॥ అథాస్య పురుషస్య చత్వారి స్థానాని భవంతి ।

నాభి హృదయం కంఠం మూర్ధాచ ।

తత్ర చతుష్పాదం బ్రహ్మ విభాతి ।

జాగరితే బ్రహ్మస్వప్నే విష్ణుస్సుషుప్తౌ రుద్రస్తురీయమక్షరం।

స ఆదిత్యో విష్ణుశ్చేశ్వరశ్చ ।

స్వయమమనస్క మశ్రోత్ర మపాణిపాదం జ్యోతిర్విదితం।

பின்னர் இந்தப் பரிபூரணனான புருஷோத்தமனுக்கு நான்கு இருப்பிட ஸ்தானங்க ளிருக்கின்றன. அவை நாபி, இருதயம், கண்டம், சிரசுச்களாம். அந்த நான்கு ஸ்தானங்களிலும் நான்கு பாதங்களாகப் பிரம்மம் பிரகாசிக்கும். அது சாக்கிரதையில் சதுர்முகப் பிரம்மாவாகவும், சொப்பனத்தில் விஷ்ணுவாகவும், சுழுத்தியில் உருத்திரனாகவும், துரியத்தில் நாசரகித சொரூபமாகவும் விளங்கும். இவ்வண்ணமான பரமாத்மாவே சூரியனும், விஷ்ணுவும், சிவனுமாகி, சுயமாயும், மனதில்லாததாயும், ஜோதி ரூபமாயும் விளங்கும்.

యత్ర లోకా నలోకా దేవా నదేవా వేదా నవేదా

యజ్ఞా నయజ్ఞా మాతా నమాతా పితా నపితా

స్నుషా నస్నుషా చాండాలో నచాండాలః

పౌల్కసో నపౌల్కస శ్శ్రమణో నశ్రమణ

స్తాపసో నతాపస ఏకమేవ తత్పరం బ్రహ్మవిభాతి నిర్వాణం।

నతత్ర దేవాఋషయః పితర ఈశతే ప్రతిబుద్ధస్సర్వవిద్యేతి।

எந்தப் பரப்பிரம்மம் உலகங்கள், உலகங்களல்லவோ; தேவதைகள், தேவதைகளல்லரோ; வேதங்கள், வேதங்களல்லவோ; யாகங்கள், யாகங்களல்லவோ; தாய், தாயுமல்லளோ; தந்தை, தந்தை யல்லனோ; மருமகள், மருமகளல்லளோ; சண்டாளன், சண்டாளனல்லனோ; சக்கிலி, சக்கிலியல்லனோ; சந்நியாசி, சந்நியாசி யல்லனோ; தபசி, தபசியல்லனோ; அந்தப்பரப்பிரம்மம் தனிமையான மோக்ஷ ஸ்வரூபமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பரப்பிரம்மத்தைத் தேவதைகளாலும், ருஷிகளாலும், பிதிருதேவதைகளாலும் நியமிக்கப்பட்டதல்ல. யாவரும் சருவஞ்ஞனாகிய அந்தப்பிரம்மத்தைத் தெரிந்து அடைகின்றார்கள்.

హృదిస్థా దేవతా స్సర్వా హృది ప్రాణాః ప్రతిష్ఠితాః ।

హృది ప్రాణాశ్చ జ్యోతిశ్చ త్రివృత్సూత్రంచ తద్విదురితి ।

హృది చైతన్యే తిష్ఠతి ।

యజ్ఞోపవీతం పరమం పవిత్రం ప్రజాపతేర్య త్సహజం పుర స్తాత్ ।

ఆయుష్య మగ్ర్యం ప్రతిముంచ శుభ్రగ్ం యజ్ఞోపవీతం బల మస్తు తేజః ।

சருவேந்திரிய தேவதைகளும் இருதயத்திலிருக்கின்றார்கள். பஞ்ச பிராணங்களும் இருதயத்தில் பிரதிஷ்டித்திருக்கின்றன. இருதயத்

தினிடத்தில் அந்த பஞ்ச பிராணங்களும், தேஜோரூபமான ஆத்மாவும், (இந்திரிய பிராண தேஜசு என்னும்) முவ்வித சூத்திராத்தும சொரூபமான யஜ்ஞோபவீதம்=பூணூனூல், அப் பிரம்மமென்று பிரம்மஞானிகள் அறிந்து கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட ஞானத்துமகமான பரமாத்துமா இருதயத்தில் அதிஷ்டித் திருக்கின்றது. முன்பு சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவுக்குக் கூடப் பிறந்ததாயும், சிரேஷ்டமான தாயும், பாவனமானதாயும், ஆயுள் விருத்தி செய்வதாயும், முதன்மையாயுமுள்ள யஜ்ஞோபவீத மெதுவோ அதைக் கிரகியுங்கள். பரிசுத்தமும், பலமும், தேஜோரூபமுமான யஜ்ஞோபவீதம் உண்டாகுமென் றறிக.

సశిఖం వపనం కృత్వా బహిస్సూత్రం త్యజేద్బుధః ।
యదక్షరం పరంబ్రహ్మ తత్సూత్ర మితి ధారయేత్ ।
సూచనాత్సూత్ర మిత్యాహు స్సూత్రం నామ పరంపదం ।
తత్సూత్రం విదితం యేన సవిప్రో వేదపారగః ।
యేన సర్వ మిదం ప్రోతగ్ం సూత్రే మణిగణాఇవ ।
తత్సూత్రం ధారయే ద్యోగీ యోగవిత్తత్వ దర్శివాన్ ।

புத்திமான்களாகிய பிரம்மஞானிகள் சிகையைக் கண்டித்து, வெளியில் கர்மார்த்தமாகத் தேகத்தில் தரித்த யஜ்ஞோப வீதத்தையும் தியஜித்து, நாசரகிதமான பரப்பிரம்ம மெதுவோ அதுவே யஜ்ஞோபவீதமென்று தரித்துத் தியானிப்பார்கள். அப்படிப் பரப்பிரம்மத்தைக்காட்டும் சூத்திரமென்று (பூணனூலை) சொல்லினர். சூத்திராத்துமாவே மோக்ஷசொரூபமானது. எவனால் அந்த மோக்ஷ சொரூபமான யஜ்ஞோபவீதமென்னும் சூத்திராத்துமாவைத் தெரிந்துகொள்ளப் படுகிறதோ அவனே பிராம்மணன்; வேதத்தின் முடிவை யறிந்தவனாவான். இந்த சமஸ்த பிரபஞ்சமும் கயிற்றினிடத்தி லுள்ள மணிகளுடைய கூட்டம்போல், எதனால் (இந்திரியபிராண தேஜோரூபமான சூத்திரத்துடன்) கோத்திருக்கின்றதோ, அந்தப் பிரம்மசூத்திரத்தை, யோகவித்தையை யறிந்தவனும் பிரம்மத்தினுடைய நிஜசொரூபத்தைத் தரிசித்தவனுமான யோகி யென்கிற பெயரடைந்தவன் சதா தியானிக்கின்றவ னாவான்.

బహిస్సూత్రం త్యజే ద్విద్వాన్ యోగముత్తమ మాస్థితః ।
బ్రహ్మభావ మిదం సూత్రం ధారయేద్యస్స చేతనః ।
ధారణా త్తస్య సూత్రస్య నోచ్ఛిష్టో నాశుచిర్భవేత్ ।
సూత్ర మన్తర్గతం యేషాం జ్ఞాన యజ్ఞోపవీతినాం ।
తేవై సూత్ర విదోలోకే తేచ యజ్ఞోపవీతినః ।
జ్ఞాన శిఖినో జ్ఞాననిష్ఠాః జ్ఞానయజ్ఞోపవీతినః ।
జ్ఞానమేవ పరంతేషాం పవిత్రం జ్ఞానముచ్యతే ।

பிரம்ம சொரூபத்தை யறிந்த ஞானியானவன் உத்தமமான யோகவித்தையை யடைந்து வெளியில் கர்மாநுகுணமாகத் தரித்திருக்கிற பூணனூலை நீக்கிவிடுவான். எவன் பரப்பிரம்ம ரூபமான இந்தப் பிரம்ம சூத்திரத்தைத் தரித்துத் தியானிக்கின்றானோ, அவன் ஞானசொரூபனை சேதனன். அப்படிப்பட்ட சூத்திராத்துமாவைத் தரிப்பவனுக்கு எச்சில் இல்லை; அசுசியும் இல்லை. பரப்பிரம்ம ஞானமே யஜ்ஞோப வீதமென்று யாருக்குப் புத்தி யுண்டாகிறதோ, அவர்களே உலகத்தில் யஜ்ஞோபவீதத்தை யறிந்தவர்களாகின்றார்கள். பரப்பிரம்மஞானத்தையே குடுமியா யுடையவர்களும், பிரம்ம ஞானமே யஜ்ஞோபவீதமா யுடையவர்களும், பிரம்மஞானமே நிஷ்டையாயுடையவர்களும் எவர்களோ, அவர்களுக்குப் பிரம்மஞானமே சிரேஷ்டம்; பிரம்மஞானமே பரிசுத்தமென்று சொல்லப்படுகிறது.

అగ్నేరివ శిఖా నాన్యా యస్య జ్ఞాన మయీ శిఖా ।
సశిఖీత్యుచ్యతే విద్వా న్నేతరే కేశధారిణః ।
కర్మణ్యధి కృతాయేతు వైదికే బ్రాహ్మణాదయః ।
తేభిధార్య మిదం సూత్రగ్ం క్రియాంగం తద్ధివైస్మృతం ।
శిఖాజ్ఞాన మయీయస్య ఉపవీతంచ తన్మయం ।
బ్రాహ్మణ్యగ్ం సకలం తస్య ఇతిబ్రహ్మ విదోవిదుః ।

எவனுக்கு அக்கினியைப்போன்ற ஞானரூபமான குடுமியன்றி, வேறான குடுமியில்லையோ, அப்படிப்பட்ட ஞானியே குடுமி யுடையவனென்று சொல்லப்படுவான். மற்றவர்கள் குடுமியைத் தரித்தவர்க ளல்ல. பிராமணர் முதலானவர்களாயிருந்தாலும், வேதத்திலே விதித்திருக்கின்ற கர்மங்களுக்குரிய அதிகாரிகளால் இந்த பாகிய தேகத்தில் யஜ்ஞோபவீதம் தரிக்கத் தகுந்தது. அந்த யஞ்ஞோபவீதமே கர்மகிரியைகளுக்குச் சாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எவனுக்குக் குடுமி பிரம்மஞான ரூபமானதோ, அவனுக்கு யஜ்ஞோபவீதமும் அந்தப் பிரம்மஞானரூபமேயாம். அவனுக்குச் சகலபிரம்மதருமமு முண்டென்று பிரம்மவித்துக்கள் அறிகிறார்கள்.

ఇదం యజ్ఞోపవీతంతు పరమం యత్పరాయణం ।
సవిద్వాన్ యజ్ఞోపవీతీస్యాత్స యజ్ఞస్తంయజ్వనం విదుః।
ఏకోదేవ స్సర్వభూతేషు గూఢః సర్వవ్యాపీ సర్వభూతాం
తరాత్మా ।
కర్మాధ్యక్షః సర్వభూతాధివాస స్సాక్షీ చేతా కేవలో
నిర్గుణశ్చ ।
ఏకోవశీ సర్వభూతాంతరాత్మైకగ్ం రూపం బహుధా యః
కరోతి ।
తమాత్మస్థం యేనుపశ్యంతి ధీరా స్తేషాగ్ం సుఖం శాశ్వతం
నేతరేషాం ।

இவ்வண்ணம் யஜ்ஞோபவீதமான சூத்திராத்துமாவை சிரேஷ்டமானதாகவும், பரப்பிரம்மம் ஆசிரயித் திருக்கிறதாகவுந் தெரிந்தவன் பிரம்மாத்துமகமான யஜ்ஞோபவீதத்தை யுடையவனுகின்ருன். அப்படித் தெரிந்தவனே யஜ்ஞசொரூபன். அப்படித் தெரிந்துகொண்டவனையே பிரம்மவித்துக்கள் யாகத்தைச் செய்தவனுகத் தெரிந்துகொள்ளுகிருர்கள். தனியனும் சுயம்பிரகாசகனுமான பரமாத்துமா, சகல சிவர்களிடத்தும் இரகசியமாயிருக்கின்றவனும், எங்கும் வியாபித்தவனும், சருவபூதங்களுள்ளு மிருக்கின்ற ஆத்துமசொரூபனும், கருமங்களுக்கு அதிபதியானவனும், சருவபூதங்களிலும் அதிஷ்டித்து வசிக்கின்றவனும், சாக்ஷிபூதமாக பார்த்துக்கொண்டிருக்கின்றவனும், சைதன்னியமென்னும் ஞானசொரூபனும், தன்னந்தனியனும் குணமற்றவனுமாக விருக்கின்ருன். அத்துவிதிஞய் சகலத்தையுஞ் சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கின்றவனுய் சமஸ்தபூதங்களுக்குள் ளிருக்கின்றஆத்துமசொரூபனுயுள்ள எந்தப்பரமாத்துமா ஓரோரூபத்தை அநேக ரூபங்களாயுஞ் செய்கின்ருனே, அந்தந்த இருதயத்தி லிருக்கின்ற பரமாத்துமனை, எந்த ஞானதிரர்கள் அநுசரித்துப் பார்த்துக்கொண்டிருக்கின்ருர்களோ, அந்த ஞானிகளுக்கு ஸ்திரமான பிரம்மானந்த சுகம் உண்டாகின்றது. பிறருக்கு அந்தச்சுகமில்லை.

ఆత్మాన మరణిం కృత్వా ప్రణవం చోత్తరారణిం ।
ధ్యాన నిర్మథనాభ్యాసా ద్దేవం పశ్యేన్ని గూఢవత్ ।
తిలేషుతైలం దధినీవసర్పి రాపస్స్రోత స్స్వరణీషుచాగ్నిః।
ఏవమాత్మాత్మ నిజాయతే సౌనత్యేన తపయోను పశ్యతి ।
ఊర్ణనాభిర్యథా తంతూన్ సృజతే సగ్ంహరత్యపి ।
జాగ్రత్స్వప్నే తథాజీవో గచ్ఛత్యాగచ్ఛతే పునః ।
నేత్రస్థం జాగరితం విద్యా త్కంఠే స్వప్నగ్ం సమావిశేత్।

அந்தக்கரணத்தை கீழேயிருக்கும் அரணிக் கட்டையாகவும், பிரணவமாகிய ஓங்காரத்தை மேலேயிருக்கும் அரணிக்கட்டையாகவுஞ் செய்து, அக்கட்டையைக் கொண்டு கடைதலான பிரம்மதியான வப்பியாசத்தினல் சுயம்பிரகாசனை தேவனை, இரகசியமானவனென்று காணக்கூடும். ஜீவாத்துமா சத்தியத்தை யநுசரிப்பதினுலும், மனேஞான தபசினுலும், தன்னை அநுசரித்துப் பார்க்கின்றபோது, இந்தப்பரமாத்துமசொரூபம் எள்ளில் எண்ணெயைப்போலவும், தயிரில் நெய்யைப்போலவும், பிரவாகத்தில் ஜலத்தைப்போலவும், அக்கினிக்கட்டையில் நெருப்பைப்போலவும், அந்தக்கரணத்தில் சாக்ஷாத்காரமாகப்பிரகாசிக்கின்றது. சிலந்திப்பூச்சிநூலை எப்படிச்சிருஷ்டித்து சம்மாரஞ்செய்கின்றதோ அப்படி ஆத்துமா சொப்பன ஜாக்கிரதைகளில் சேர்ந்துபோகின்ருன். பிறகு வருகின்ருன்.

సుషుప్తగ్ం హృదయస్థంతు తురీయం మూర్ధ్ని సంస్థితం ।
యతో వాచో నివర్తంతే అప్రాప్య మనసాసహ ।
ఆనందమేతజ్జీవస్య యజ్జ్ఞాత్వా ముచ్యతే బుధః ।
సర్వవ్యాపిన మాత్మానం క్షీరేసర్పిరివార్పితం ।
ఆత్మ విద్యా తపోమూలం తద్బ్రహ్మోపనిషత్పదం ।
తద్బ్రహ్మోపనిషత్పదమితి ॥ బ్రహ్మోపనిషత్సమాప్తా॥

சிவாத்துமா கண்ணினிடத்திலிருந்து ஜாக்கிரதையையும், கண்டத்திலிருந்து சொப்பனத்தையையும், இருதயத்திலிருந்து சுழுத்தியையும் அடையும்; சிரசினிடத்தில் துரீயமான பிரம்மத்தை யடைகின்றது. மனதுடன் வாக்கு முதலிய சகல இந்திரியங்களும், பரப்பிரம்மத்தை அடையாமல் நிவர்த்திக்கப்பட் டிருக்கின்றன; ஞானியானவன் பரப்பிரம்மத்தை அறிந்தவனுய்க்கொண்டு ஜனனமரணத்திலிருந்து விடுபடுகின்ருன். இந்தப் பரப்பிரம்மமே ஜீவன் ஆநந்தத்தை அடையச்செய்கின்றது. பாலிலிருக்கின்ற நெய்யைப்போலவே, பிரம்மவித்தியா ஞான தபோமூலமா யிருக்கின்ற பரமாத்துமாவை, எங்கும் வியாபித்திருக்கின்றவனுக பிரம்மவித்துக்கள் அறிகின்ருர்கள். அந்தப் பிரம்மசொரூபமே பரப்பிரம்மஸ்தானத்தைத் தெரியப்படுத்துகின்றது. அந்தப்பிரம்மம் பிரம்மோபநிஷத்து ஸ்தானமா யிருக்கின்றது என்று பிரம்மோபநிஷத்து முடிந்தது.

ஸஹநாவவத்விதி ஶாந்திஃ.

முதற்பத்து.

அத்துவித மெனுஞ்சமயக் கோட்பாட்டை யறைகிறே னவற்றைக்கேண்மின்
அத்துவித மாம்பிரமம்விசேட மற்றதாய்ச் சித்துமாத்திரமாய்
அத்துவிதம் சஜாதிய்யவிஜாதிய்ய சுவகதமாம் பேதங்களிலதாய்
அத்துவிதம் மாயாசபளமாம்பிரம மாமெனச்சொல்லுவ தாமால். (க)

அவைகட்டாமுஞ்சீவ பிரமபேத மசித்துபேதங் கியானசத்தியாதி
யவைகளாங் குணபேதங்களிலாம லாஞ்சாதி விக்ஷேபிகாவவித்தை
யவைகளாற் பிரமந்திரோகிதமாகி யகிலதேவரு மனிதராதியாகி
யவைகளாய்ச்சித் தாகவுந்தோன்று மதுநிருவிசேட சின்மாத்திரம். (உ)

இவ்விதபிரம மாகையாற் சித்துமசித்துக ளிரண்டுந்தானெனவே
கவ்வையாமவித்தை யனாதியாயுடைய காரணத்தாற் பிரமத்தைச்
செவ்வைபாய்த் திரோதானத்தைச் செய்திடுந் தியக்கத்தின்பொருட்டால்
முவ்வகை சிதசித்தீசர்களெனவே மொழிவது பிரமமாத்திரமாம். (ங)

தத்துவமசிமுதல் வாக்கியஞானத் தகைமையான் பிரமந்தானென்றே
மித்தையாமந்த ஜராமரணாதி விகற்பமாந்துக்கம் வீடுவதே
வித்தையின்பயனு மோக்கமென்பதுவாய் விவேகித்துச் சொல்லுவரதனாற்
சித்தியுமுத்தி வாக்கியஞானத் தெளிவதாலென்னவே தேறும். (ச)

இத்தகையானாற் சராசரமவைகள்வே றில்லவாயேற்படு மாற்றான்
முத்தியும்பந்தம் பிரமத்துக்கென்றே மொழிவது யுசிதமாப்முடியும்
வித்தையாலவித்தை நீக்குமாமந்த விசேடவாக்கியங்களும் வீணாய்ப்
பெற்றவையாகு மல்லதவித்தையும் பிரமத்திற் கேயலவோதாம். (ரு)

ஈசனுமவித்தை யிருபொருளுளதா யிதரமானவை மித்தையாகின்
ஈசனுக்கவித்தை நீக்குமச்சொற்க ளியம்புதற் கொருவருமில்லை
ஈசனுக்கவித்தை நீங்குவதென்ப தில்லையென்பது முடிவாமப்
பாசபந்தங்க ளீசனுக்குளதாய்ப் பகர்வர்யார் கேட்பவரெவரோ. (சா)

அவித்தையான்பிரம மயங்குவதாகி னதுமிகச்சிறந்தது வாகும்
அவித்தையுட்பட்ட பிரமமக்கியான மதுபொருந்திய வசத்தாகும்
அவித்தையைநீக்க வழியதாமியாது அரியரி யிப்படியுரைக்கும்
அவித்தைதானெந்த சாத்திரப்பொருளோ வகிலவேதத்தினு மிலையே. (எ)

சொல்பவருளரேல் கேட்பவர்வேண்டுஞ் சொல்லுமப்பொருட்களு முளவேல்
வெல்பவரானால் தோற்பவருண்டு வெறுமையில் வேதந்தானெதுக்கு
கல்வியைக்கற்கும் பயனதானேது காண்பவை மித்தையாமாகின்
நல்லதுந்திய தொன்றுமேயில்லை நாஸ்திகவாஸ்திக மாமால். (அ)

முமுக்ஷுக்களாவோர் பந்தத்தையகற்ற முயலுவோ ராகையினாலே
முமுக்ஷுக்கள் பிரமோபாசனையதனான் மோக்கமாம் பதவியைப்பெறுவார்
புபுக்ஷுக்களுலக வின்பத்தைக்கோரி போற்றுவர் தேவரைப்பணிவார்
புபுக்ஷுக்கள்சொர்க்க போகத்தைவிரும்பிப் புரிவர்கண் மகமுதல்வேள்வி. (கூ)

இவ்வகையொன்றுக் கொன்றுமொவ்வாம லிருக்குமித்தோஷங்க டன்னை
செவ்வையாயறிந்து பலபடவிரித்துச் செப்புமிந்நூலினைப் பயின்றால்
திவ்வியமாகுமவ் வேதநிச்சயத்தைத் தெளிவதாய்க் காண்பவராகி
அவ்வுமுவ்வாகி மவ்வுமாய்நின்ற வரும்பொரு ளறிபவராவார். (க0)

இருளினையகற்று மிரவியைப்போல விவ்வுலகரஞ்ஞானமாந் திமிர
மருளினையகற்ற மகிதலத்துதித்த மகிபனுமெதிபதிக் கடைக்கண்
அருளினையடுத்த சக்கரபாணி யாஸ்திகர்க்கின்புற வுரைக்கும்
பொருளினையடுத்த குற்றங்களிருக்கின் பொறுப்பது கடனிவைபத்தே. [வரும்.] (கக)

பொதுப்பிரகரணம்.

விலைமாதர்விலக்கம்.

(௭௯-ம் பக்கத் தொடர்.)

அவனைத் தங்கள்தொடையின்மீதேற்றி யிருக்க வைத்துக்கொண்டு, "இமைநாழி நீமறைந்திருக்திருந்தால் நான் உயிர்வாழ வறிவனோ என்னழகுள்ளசாமி" என்று, அதிகப்பிரியமுள்ள தேவியைப்போல அவனை யணைத்துக்கொண்டு, உச்சிமுத லுடம்பெல்லாம் பரிசித்து, மோந்து மோந்துத் தன்னவயவ மெல்லாம் தெரியக் காட்டிக்கொண்டு, முந்தாடிமுந்தாடி கெட்டையேற்றி, முகத்தை மாற்றி மாற்றிச் சும்பித்து, வாழ்த்தி வணங்கி, திருஷ்டி போக்கி, அடிக்கடி அதரபானம்பண்ணித் தன்னிடத்துள்ள சிற்றுண்டிகளைப் பகர்ந்து, உண்டை யிழைந்த வெள்ளிக்கிண்ணத்துள்ள பாலை அவனுக்கூட்டி, அவனைக்கொப்பளித்து உமிழச்சொல்லி, அப்பாலைத் தான் புசித்தாலன்றி உயிர்வாழேனென்று அபிநயித்து வாங்கிக்கொண்டு, அக்கிண்ணத்தைச் செப்பிடுவித்தைக்காரன்போலே நிமைக்குமுன் அஸ்தலாகுவினால் மாற்றி, வேறேநிறைத்துள்ள எச்சிலற்ற பாத்திரப்பாலைத் தானுண்டு, இவனுக் கவ்வெச்சிலுண்டதாக ஒருபித்துக்காட்ட, அதைக்கண்ட அவனும், நாம்உமிழ்ந்ததையுண்ட இவளை நம்முயிரு முட்டலும் பொருளும் இழக்குந்தனையும் இந்த ஆசைநாயகியை விடுவனோவென்று, அவளைப்புணர்ந்து, அவள் சுருளுண்டுமிழ, இவனும் "மஹாகுருப்பிரஸாத லப்தனானேன் தன்னியனானே" னென்று, தன்சர்வசொத்தையும் இழந்தவனாய் கீழான தொண்டுகளைச் செய்து, பலநாள்கடந்து அடியுதைமுதலியதும் பட்டு, ("வெம்புவாள் விழுவாள்பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே, தம்பலந் தின்பாள் பொய்யே சாகிறேனென்பாள் பொய்யே, அம்பிலுங்கொடியகண்ணா ளாயிரஞ்சிந்தையாளை, நம்பினபேர்களெல்லா நாயினுங் கடையாவாரே" என்ற விவேகிகள் வாக்கைச் செவிமடுத்துக் கேளாமையால்,) உரோசித்துத் தலைமேல் கையை வைத்துக்கொண்டு, ("அன்னம் பழித்தநடையாலம் பழித்தவிழி யமிர்தம்பழித்த மொழிகள், பொன்னம் பெருந்தழலை வன்னங்கறுத்தகுழல் சின்னஞ்சிறுத்த விடைபெண், என்னெஞ்சறுக்கவவ டன்னஞ்சு கந்தகலை யென்னென் றுரைப்பதினிநான், சின்னஞ்சிறுக்கியவள் வில்லங்கமிட்டபடி தெய்வங்களுக்கபயமே" என்று) புலம்பி இவ்வாறழுகிறான், ஐயோவென் றேங்கி எம்பெருமானைத் தொழுகிறான்.

ஒய் தாசிவலையில் சிக்காமல் தப்பிப்பிழைத்த தன்னியனே! கேளும்: "முன்னோர்கள் தேடி வைத்த முட்டகன் பொன்னையெல்லாம் கன்னியென்ற வேசிக்கிட்டு கைப்பரையைக்கொண்டேனே" என்றும், "தோண்டித் தோண்டிப் பணங்கள் தோண்டித்தோண்டிக்கொடுத்து ஆண்டிப்பயலா யலைந்தலைந்து கெட்டேனே" என்றும், "எல்லாப் பணப்பெட்டியு மெல்லி யென்ற பெண்ணுக்கீந்துப், பொல்லாவுதைகளுண்டு போக்கிடமற்றேனே" என்றும், சேனைப்பொன்கப் பல்பல சீப்புழுவாய்ச் சுக்கரத்தின், யோனிக்கடலில்விட்டே யோடெடுக்கலானேனே" என்றும், "அற்புதயோனி யழகையுங்கொங்கையுங்கண்டு என்றன், கற்புள்ள மங்கைக் கலங்கத் தெருவில் விட்டேனே" என்றும், "புள்ளிரவிக்கையுந் துள்ளியமாளையுங் கண்டுநான், பூசித்தலிங்கத்தைப் போட்டுமறந்து விட்டேனே" என்றும், "பட்டுப்பகத்தையும் பொட்டுமுகத்தையுங்கண்டுநான், பாடிப்படித்தபரத்தை பாழாக்கிவிட்டேனே" என்றும், "பாடைப்பகட்டைக்குலுக்கை மினுக்கை யான்கண்டு யென்றன், பாக்கியமெல்லாம் பாழாக்கிப் பண்டாரமானேனே" என்றும், "கள்ளச்சிறுக்கியின் சொல்லையும் பல்லையுங்கண்டு பச்சை, வெள்ளைக் கொறுக்கை நீர் மேகவியாதிகொண்டேனே" என்றும், "ஓடுகொடுத்தாளண்ணே வல்லிகை யோடுகொடுத்தா ளண்ணே" என்றும் இப்படி பற்பலவாகப் பலபல செய்து அழுது இருமைப்பயனையு மிழந்து மதிகெட்டானுகி மதியுள்ளான் சொன்னவார்த்தையை ஸ்மரிப்பனென் றுணரக் கடவீராக.

புத்திமானே! சிலர் அவர்களோடுகூடி ரமித்திருக்கிறவர்களாக விருந்தும் தரித்திரராகாமல் செல்வவான்களாகவே யிருக்கக் காண்கின்றோமே யென்பீராயின் "வேங்கடமால்கழலே விரும்பார் விலைமாதர்மல, மாங்கடமால்செயமாலாய விரச்சிலாகச்சித், தாங்கடமாலழிவா ரிருந்தாலும் சவப்பண்டமே" என்று பரமஞானியரான ஐயங்கார் முதலின ரருளிச்செய்த படிக்குச் செல்வப் போகானுபவரைப் போலே இருந்தபோதிலும் எம்பெருமானைத் தொழும் அருட்செல்வத்தை எப்போதிழந்தார்களோ, அப்போதே அவர்கள் சஞ்சாரமுள்ள சவப்பண்டங்களென்றே கொள்ளல்வேண்டும்.

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

சாதிகளின் பிரிவு.

ஆதியில், தேவ மனித மிருக பக்ஷி கிரியக்குத் தாவர சங்கமங்களாகிய பலவகைப் பிறப்புகளும் பிரம்மா, விராட்டு, பிரஜாபதி, மகரிஷிகள் முதலானவர்களால் சிருஷ்டிக்கப்பட்டன. அவற்றிற் சில விரோதங்கள் மனிதக்கூட்டத்தாரா லுண்டாகி வருகின்றன. சுருதி ஸ்மிருதேதிகாச புராணங்களிற் சொல்லியிருக்கின்றதும் அனுஷ்டானத்திற்கு வந்திருக்கின்றதுமான சாதிப்பிரிவுகளை ஆரியர்கள் கவனிப்பார்களாகில் யாதொரு விரோதமும் விளங்கமாட்டாது.

சாதிகள் ஞானம், குணம், ஆசாரம் இவைகளால் வந்தவையென்று நன்குவிளங்கும். சாஸ்திரங்கள் ஒவ்வொரு சாதியை உயர்த்தியுந் தாழ்த்தியும் கூறுவதாகவும், இந்துதேசத்திற்றவிர மற்றத்தேசங்களில் சாதிகளில்லாமையால், பிராமணசாதியென்போர் கட்டிவைத்த பெரும்புரளியாகவும் சிலர் சொல்லுவார்கள். யாரார் எப்படிச் சொன்னபோதிலும் சாஸ்திரங்களின்மீது குறைகூறித் திரிவது மாத்திரம் அறியாமையேயாம். சாஸ்திரங்களில் சாதிவிஷயமாக பூர்வோத்தர விரோதமின்றி ஆராய்ச்சிசெய்யின் உண்மைகள் வெள்ளெனப் புலப்படும். ஒவ்வோர்தேசத்திலும் நடையுடை பாவனை குணங்கள் வெவ்வேறாக விருப்பதால் நமது ஆரியதேசத்திற்குத் தக்கபடி மனு, ருஷிகள் முதலினர் சாதிப்பிரிவுகள் செய்தார்கள்.

ஆனால் சிருஷ்டியில், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலிய சாதிகள் பிரம்மாவினால் உண்டாக்கப்பட்ட தென்று சாஸ்திரத்திற்கூறிய ஓர் முனையைக்கண்டு மகிழ்ச்சியும், மற்றோர் முனையைக்கண்டு இகழ்ச்சியும் அடைவார்கள். அப்படி நான்கு வருணமும் பிரதி கற்பத்தின் ஆரம்பத்தில், பூர்வகர்மவாசனையைத் தொட்டு உண்டாக்கப் பட்டதே யன்றி ஞானவாசனையினால் சாதியென்பது இல்லவே யில்லை. பிரம்மத்தினுடைய முகம், தோள், தொடை, பாத முதலியவற்றி லிருந்து நான்குசாதிகள் சிருஷ்டிக்கப்பட்ட தென்று சொல்வ தேனெனின், அவை அந்தந்த ஸ்தானமகிமைகளைக்காட்டும் அலங்கார வர்ணனையென்று இந்த இரஞ்சனியில் அப்போதைக்கப்போது பலிஷ்ட பிரமாணங்களின் ஆதரவுகொண்டு விளக்கியிருக்கின்றது. இங்கே அதைப்பற்றி மீண்டுஞ் சொல்வது பிரயோசனமின்றென விடுகின்றோம்.

நான்குசாதிதவிர சங்கீர்ண சாதிகள் பிரம்மாவினால் ஏன் சிருஷ்டிக்கப்பட வில்லையென்றும், சங்கீர்ணஜாதிக ளுண்டாவதற்குமுன் இச்சாதிகளால் நடக்கும் தொழில்கள் எப்படி நடந்துவந்ததென்றும் சிலர் ஆக்ஷேபனை. இந்த சங்கீர்ண ஜாதியும், ஞானம், அரசு, வர்த்தகம், ஏவல் முதலானவற்றால் நான்கு சாதியைக் கற்பித்தது போலவே, அந்நான்கு சாதியினிடத்திலிருந்து கற்பிக்கப்பட்டதென்று ஸ்மிருதிகள்விளக்குகின்றன. அப்படி சங்கீர்ண சாதிகளைப் பிரிக்காவிட்டால், இந்தக்காலத்தில் காமக் குரோத லோபங்கள் பெருகி ஜனங்கள் கெட்டதுபோல இன்னமுங் கெட நேரிடும். சாதிவரம்பு மாத்திரம் ஆரியதேசத்தில் பிரிக்கப்படாமற்போ யிருந்தால், மக்கள் ஜனனம் விலங்குஜனனமாய் மாறிவிட்டிருக்கும். இந்தக்காலத்தில் சங்கீர்ண சாதியார் தங்கடங்கள் சாதிகளைச்சொல்லிக்கொள்ளுவதில் வெட்கப்பட்டு வெவ்வேறு சாதியாக மாறப்பார்க்கிறார்கள். இவற்றால் உயர்ந்த சாதியார் தாழ்ந்தும், தாழ்ந்த சாதியார் உயர்ந்தும் போகப்போகிறதில்லை. பரத்துக்குரிய ஞானத்தினாலே பிராமணர்முதல் பஞ்சமசாதியார்வரையில் உயர்ந்துகொண்டே வருவார்களன்றி, இகத்துக்குரிய அஞ்ஞானத்தினாலே எந்த ஜாதியாரும் உயராது தாழ்ந்துகொண்டே வருவார்கள் என்பவற்றிற்குச் சந்தேகமே யில்லை. உயர்ந்த ஜாதிக்குரிய குணம் ஆசார முதலியவைக ளில்லாமல் உயர்ந்தோரென்று கூக்குரலிடுவது பேதைமைத் தன்மையாம். தாழ்ந்த சாதிக்குரிய இழியகுணம் ஆசாரத்தை யடைந்து நாங்கள் தாழ்ந்தசாதி யல்லவென்று சொல்வதும் பெரும் பேதைமைத்தன்மையாம். திரவிய மொன்றினாலேயே தாழ்ந்தது உயர்ந்தசாதியாகப் போகிறதில்லை. ஸ்மிருதிகளில் தாழ்ந்தசாதி உயர்ந்தசாதியாகிறதாகச் சொல்லியிருக்கிற தென்று சிலர் சொல்லுவர். இக்கலியில் அப்படிநடப்பதற்குச் சத்தியம் குறைந்திருப்பதால் நடவாதென்றே சாதிகளை ருஷிகள் வரையறுத்து விட்டார்கள். உயர்ந்த ஜாதியார் இரகசியத்தில் தாழ்ந்தசாதியார் குணத்தையும் ஆசாரத்தையுமடைந்து உயர்ந்தசாதியா ரென்று சொல்லிக்கொள்ளுகிறார்களேயென்று சிலர் அபிப்பிராயம். அப்படி உயர்ந்தசாதியார் தாழ்ந்த படியை யனுசரித்தால் அவர்கள் குடும்பம் நசித்துவிடுமென்று சபிக்கப்பட்டிருக்கிறது. அவ்வண்ணமே அநேக உயர்ந்தசாதிகள் நாசமாகி வருவனவும் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்.

(வரும்.)

இதிகாசபுராணப்பிரகரணம்.

வேதவியாசர்களின் விவரம்.

(விஷ்ணுபுராணத்திலிருந்து எடுத்தது.)

வேதமென்கிற மகாவிருக்ஷத்திற்குக் கிளைகள் அநேக முண்டு. அளவற்றவை யாகையாலே அவற்றை விரித்துச்சொல்வது கடினம். எம்பெருமான் துவாபரயுகந்தோறும் வியாசாவதாரஞ் செய்தருளி ஜநங்களுக்கு உற்சாகம், சாமர்த்தியம், ஓதித்தரிக்குஞ் சக்தி, இவையெல்லாம் அற்பமாயிருப்பதைக்கண்டு அவர்கள் இதத்திற்காக ஒன்றாயிருக்கின்ற வேதத்தை அநேகம்பிரிவாக்கியருளுகிறான். அவ்வெம்பெருமான்எந்தச் சரீரத்தை அதிஷ்டித்து வேதபேதங்களைச் செய்தருளுகிறானோ அவையெல்லாம் வேதவியாசர் என்கிற திருநாமமுள்ள அவ்வெம்பெருமானுடைய திருமேனிகளாம்.

இந்த வைவச்சுத மனுவந்தரத்திலே துவாபரந்தோறும் மகரிஷிகளாலே இருபத்தெட்டுதரம் வேதம் பிரிக்கப்பட்டது. ஆதலால் இதுவரையிலும் இருபத்தெட்டு வியாசர்கள் சென்றிருக்கிறார்கள். அவர்கள் யாரென்றால், முதல் துவாபரத்தில் பிரம்மாவும், இரண்டாவதில் வைவச்சுதமனுவும், மூன்றாவதில் சுக்கிரனும், நான்காவதில் பிரகஸ்பதியும், ஐந்தாவதில் சூரியனும், ஆறாவதில் இயமனும், ஏழாவதில் தேவேந்திரனும், எட்டாவதில் வசிட்டரும், ஒன்பதாவதில் சாரசுவதரும், பத்தாவதில் திரிதாமாவும், பதினோராவதில் திரிவிருஷாவும், பன்னிரண்டாவதில் பரத்துவர்சரும், பதின்மூன்றாவதில் அந்தரிக்ஷரும், பதினான்காவதில் த்ருமியும், பதினைந்தாவதில் திரையாருணியும், பதினாறாவதில் தனஞ்செயனும், பதினேழாவதில் கிருதஞ்சயனும், பதினெட்டாவதில் சஞ்செயனும்; பத்தொன்பதாவதில் பரத்துவாஜரும், இருபதாவதில் கவுதமரும், இருபத்தொன்றாவதில் ஹரியாத்துமாவென்று வேறுபுராணங்களிற் சொல்லப்பட்ட உத்தமரும், இருபத்திரண்டாவதில் வாஜிசிரவன் என்று மறுபேருள்ள வேனனும், இருபத்துமூன்றாவதில் திருணபிந்து என்று நாமாந்தரம்பெற்ற சோமசுஷ்மாயணனும், இருபத்துநான்காவதில் வால்மீகியென்னுந் திருநாமத்தால் பிரசித்தரான பார்க்கவரிக்ஷரும், இருபத்தைந்தாவதில் சக்திமகரிஷியும், இருபத்தாறாவதில் பராசரரும், இருபத்தேழாவதில் ஜாதுகர்ணனென்பவரும், இருபத்தெட்டாவதான இந்தத் துவாபரத்திலே கிருஷ்ணத்துவைபாயனரென்னும் வேதவியாசரும் வேதவியாசர்களானார்கள். இப்படி இருபத்தெட்டு மகாரிஷிகள் துவாபரயுகமுடிவானகாலங்களில் வேதத்தை நான்காய்ப் பிரித்து லோகோபகாரஞ்செய்துவந்தார்கள். இனிவருந் துவாபரயுகத்தின் கடைசியில் துரோணகுமாரரான அசுவத்தாமா வியாசராவார்.

ஆதியிலே பிரம்மாவினாலே அத்தியயனம் பண்ணப்பட்ட வேதமானது நான்குபாதங்களுள்ளதாய் அநேகவாயிரங் கிளைகளையுடையதாயுமிருந்தது. அதினின்றும் அக்கினிஹோத்திரம், தரிசபூர்ணமாஸம், சாதுர்மாசியம், பசுபந்தம், சோமம் என்கிற ஐந்தும்; தேவயக்கியம், பிதுர்யக்கியம், பூதயக்கியம், மனுஷ்யயக்கியம், பிரமயக்கியம் என்கிற பஞ்சமாகாயக்கியங்களும் ஆகப்பத்துவிதமான சகலயக்கியங்களும்; திரவியம், சேதம், பலம், காலம், ஞானம், காமம், கர்மம், சிரத்தை, அவஸ்தை, ஆகிருதி, நிஷ்டை என்கிறபத்தங்கங்களுடையனவாய்உண்டாயின. இவ் யாகங்களெல்லாம் சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்குந் திறமுள்ளனவா யிருக்கும். பின்பு இருபத்தெட்டாவது யுகத்திலே கிருஷ்ணத்துவைபாயனரென்கிற வியாசர் மகாசமர்த்தராகையாலே நான்குபாதங்களோடு கூடியிருந்த அந்தவொருவேதத்தை நான்காகப்பிரித்தார். இவர் இப்போது எப்படிப் பிரித்தாரோ அப்படியே முன்யுகங்களிலும் பராசரரும் மற்றுமுள்ள மகாரிஷிகளும் பிரித்தார்கள். நிதரிசனமாக வியாசர் பிரித்தது போலவே ஸ்ரீமந்நாராயணம்சம்பெற்று மற்றவியாசர்களும் அப்போதப்போது வேதத்தைப்பிரித்தருளினார்கள். கிருஷ்ணத்துவைபாயனரான வியாசரும் ஸ்ரீமந்நாராயணம்சமே யாவார். ஏனெனில், இந்தப்பூலோகத்தில் மற்றொருவன் மகாபாரதஞ்செய்ய வல்லவனாவானா?

இத்திபாதி மகிமாதிசயங்களை யுணர்ந்த புராண கர்த்தாவாகிய பராசரர் இவ்வண்ணந் துதிசெய்வாராயினர்.

ஏகாக்ஷர ஸ்வரூபமாய், நாசவிகாரங்களையடையாமலிருந்த பிரணவமானது உச்சரிக்கப்படும்போவில் தான் விரிவதினாலும் வேதத்தைவிரிப்பதினாலும் பிரம்மம் என்று சொல்லப்படும். அதெப்படியென்றால் அந்தப்பிரணவத்தினிடத்தே நித்தியமாயிருக்கிற முதல் மூன்று வியாகிருதிகளும், இருக்குமுதலான நான்குவேதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் அப்படிப்பட்ட மகிமையுள்ள பிரணவரூபமான சப்தப்பிரம்மத்தின்பொருட்டுத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன். உலகத்தின் பிரளயத்திற்கும் உற்பத்திக்

கும் எது காரணமாயிருக்கின்றதோ எது மகத்தத்துவத்திற்கும் மேன்மையானதாய் மறைக்கப்படும்பொருளா யிருக்கிறதோ, அப்படிப்பட்ட பிரணவப்பிரம்மத்திற்குத்தெண்டன்சமர்ப்பிக்கிறேன். அகாதமாயும் அபாரமாயும் க்ஷயமில்லாததாயும் உலகத்தை மோகிப்பிக்கின்ற தமோகுணத்திற்கு இடமாயும் சத்துவகுண காரியமான பிர்காசத்தினுலும் ரஜோகுணகாரியமான பிரவர்த்தனத்தாலும் தருமமுதலான சகல புருஷார்த்த சாதகமாயும் சாங்கிய சாஸ்திரஞான முடையவர்களுக்கு பிரகிருதிபுருஷ விவேகத்தி னுபாயமாதலாலே நிலைபெறு மிடமாயும் சமதமாதி குணங்களைச் சாதிக்கவல்ல யோகிகளுக்கு அவற்றைச் சாதிக்கு முபாயமாயும் விளங்குகின்ற அந்தச் சப்தப் பிரம்மத்துக்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன். எது அவியக்தமாயும் அமிருதமாயும் சாசுவதமாயுமிருக்கிற பிரவர்த்திப் பிரமமுண்டோ (புருஷார்த்தப்பிரவர்த்தி ஹேதுவான பிரணவம்) அதற்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன். சருவப்பிரபஞ்சகார்ணமான பிரதானமாயும் பரமாத்தும ஸ்வரூபர்திகளைக் காட்டுகையினுலே பரமாத்துவாவுக்குக் காரணமாயும் உபநிஷத்துக்களில் அக்ஷரமுதலாய்ப் பிரதானமீருகவுள்ள சொற்களாலே வெகுவிதமாய்ச் சொல்லப்படுவதாயும் பிரிவற்றதாயும் சுத்தமாயு மிருக்கிற அந்தப் பிரணவப் பிரம்மத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன். பரமாத்துமாவான ஸ்ரீவாசுதேவனுக்கு ஸ்வரூபமாயிருக்கிற அந்தப் பிரணவரூபமான பரப்பிரம்மத்துக்கு நித்தியம் பலமுறை தெண்டன் சமர்ப்பிக்கிறேன். அவ்யவமான அக்ஷரவகையாலே மூன்ருய்ப்பிரிந்திருந்தாலும் அவயவீ ஸ்வரூபத்தில் பிரிவற்றதாயிருக்கிற அந்தப் பிரணவமானது அந்த ஸ்ரீவாசுதேவனேயாம். அந்த ஸ்ரீவாசுதேவன் சகல பூதங்களிலும் ஒருவனு யெழுந்தருளி யிருந்தாலும் பேதபுத்தி விஷயங்களான பிரம்ம ருத்திர இந்திராதி மூர்த்திகளை யதிஷ்டித் திருக்கையாலே வெவ்வேருக எண்ணப் படுகிருன். அவனே இருக்குவேதசொரூபியும் யசுர்வேதசொரூபியும் சாமவேத சொரூபியுமாய் இம்மூன்று வேதசாரமான பிரணவஸ்வரூபியாயும் புருஷார்த்த ஸ்வரூபியாயுமிருக்கிருன். அவனே சகலஆத்துமாக்களுக்கும் அந்தராத்துமாவாயிருக்கிருன். அவனே பிரிவற்ற வேதரூபமாயிருந்து பலவிதமான வேதங்களாகப்பேதிக்கப்படுகிருன். அந்த அநந்தனை ஸ்ரீயகவானே வேதசாகைகளைப் பிரிக்கிற வியாசாதிஸ்வரூபியாகிருன். சகலவேத சாகைகளின் ஞானமும் அந்த ஸ்ரீஅநந்தனேஎன்றறியும்.

ஆரியமதசித்தாந்தப் பிரகரணம்.

விசிஷ்டாத்துவைதம்.

“ஏகோஹவை நாராயண ஆஸீத்” என்று, சருவத்திற்குங் காரணபூதனுகுஞ் சருவேசுவரனெருவனேயிருக்கிருனென்றும் “வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேஶவாத் பரம்” என்று, உயர்வான வேதசாத்திரங்களில் ஆராய்ந்தவிடத்திற் கேசவனைவிட மேலான தெய்வமொன்றுமில்லை யென்றும், பரோக்ஷார்த்தப் பிரகாசகமாய், தனக்குத்தானே பிரமாணமான வேதம் கூறுகின்றது. இப்படி திரிமதத்தினருள்ளும் ஒப்பாதவ ரொருவருமில்லை. ஒப்பாத நாஸ்திகரை இங்கு எடுக்கவேண்டிய காரணமில்லை. நாராயண சப்தத்தில், “ரிங்க்ஷயே” என்கிற தாதுவாலுண்டான ர - சப்தம் க்ஷயிக்கும் பதார்த்தத்தைத் தெரிவிக்கும். இது ராஃ என்று பஹுவசன மானபோது க்ஷயிக்கும் பதார்த்தங்களை யுணர்த்தும். இந்த ராஃ என்கிற சப்தத்திற்கு, ருன்னல்ல வென்று பொருள் கொடுக்கும் நகாரம் சேர்ந்தபோது, நராஃ என்ருகும். நராஃ என்ருல் க்ஷயமாகாத நித்திய பதார்த்தங்களாம். நாராஃ என்கிற ரூபங்களை யடையும்போது நித்திய பதார்த்தங்களின் சமூகங்களைக்கூறும். இந்த நித்தியபதார்த்தங்களே சேதனங்கள் அசேதனங்களென்று இரண்டுவிதமாயிருக்கும். “இண்கதௌ” என்கிறதாதுவால் உற்பன்னமான ‘அயன’ சப்தம், “ஈயத இத்யயநம்” என்று கர்மணிவியுற்பத்தியால் பிராப்பியமும், “ஈயதேநேநேத்யயநம்” என்று கரணூர்த்தத்தின் உற்பத்தியால் பிராபகமும், “இயம் த்யஸ்மிந்நித்யயநம்” என்கிற அதிகரணத்தின் உற்பத்தியினுல் ஆதாரத்தையுந் தெரியப்படுத்துகின்றது.

முன்னைய நாராஃ என்கிற சப்தத்தில் அயந சப்தஞ் சேருவதினுல், “நாராணுமயநம் யஸ்ய ஸஃ நாராயணஃ” என்று தத்புருஷஸமாஸமும், “நாராஃ அயநம் யஸ்ய ஸஃ நாராயணஃ” என்று பஹுவ்ரீஹி ஸமாஸமும் ஏற்பட்டு, நாராயண சப்தத்திற்குக் கிரமமாக நித்தியவஸ்துக்களின் சமூகத்தினுடைய பிராப்பிய பிராபகாதரங்களானவனுகையால் பரத்வமானவனென்றும், நித்திய வஸ்துக்களுக்கு ஆதாரமா யிருப்பவனுகையாலே சருவாந்தரியாமி யென்றும், சுலபனுனவனென்றும் பொருளாகின்றது. அன்றியும், “நரஸ்யேதம் நாரம் அவதாரேஷு நாரம் வபுர இதி

நாராயணஃ" என்றால், அவதாரங்களில் நரசரீர மடையுமவன். "நாரா ஆபஃ அயநம் ஸ்தாநம் யஸ்ய ஸஃ நாராயணஃ" என்றால், ஜலத்தை ஸ்தானமாகவுடையவன். "ராஸ்யப்தாஃ அயந்தே நிர்கச்சந்தே யஸ்மாத் பராயணஃ, ராயணுதங்யஃ அராயணஃ, அராய்ணோ நபவதீதி நாராயணஃ" என்றால், எவனால் சப்தம் வெளிப்படுகிறதோ, அவன் ராயணன், ராயணனாகாதவன் அராயணன். அராயணனாகாதவன் நாராயணன்=சப்த கம்பனென்பது. இத்தியாதி அர்த்தங்களைக் கொடுக்கின்ற நாராயண சப்தம் சிவப்ரஹ்மேந்த்ராதி கௌண நாமங்களைப்போலே யல்லாது, விஷ்ணு வாசுதேவாதி முக்கியநாமங்களிலொன்றா யிருக்கின்றது. இதினாலே, "ஹோக்தாஹோக்யம் ப்ரேரிதாஞ்சமத்வா" என்கிற ரீதியாலிருக்கின்ற சிதசிதீஸ்வர்களென்னும் மூன்று தத்வங்களு மொன்றோ டொன்று எக்காலத்திலும் பிரிந்திராதென்றும், மூன்றும் நித்தியங்களென்றும் நன்றாய்த் தெரியவரும்.

கோட்டைபேட்டைகளும், பிரஜைகளு மில்லாதபோது அரசனிருப்பது அநாவசியம். அரசன் ஒருவன்மாத்திரமிருந்தால் அவனை அரசனென்று யார் கூறுவர். அவன் யாருக்கு அரசனாயிருப்பான். அவனுக்கு அரசனென்கிற (சப்தம்) பட்டமெப்படி யுண்டாகும். கோட்டைபேட்டைகளும், மாடமாளிகைகளும் இல்லாதபோது அரசனுக்கும், அவன் பிரஜைகளுக்கும் சௌக்கிய மெங்ஙனமிருந் துண்டாகும். அவ்வண்ணமே, ஈச்சுவரன் மாத்திர மிருந்து சிதசித்துக்க ளில்லாம லிருந்தால் அவனுடைய ஈச்சுவரத்துவம் எதற்காகவிருக்கும். ஈச்சுவரனுடைய சொரூப மெப்படிப் பிரகாசிக்கும். அவன் கொடுத்த வேதசாஸ்திரங்களுக்கு பிரயோஜன மென்னவா யிருக்கும். இதுவுமல்லாமல் சூக்ஷ்மவஸ்துவொன்றிருந்தாலல்லவா, ப்ரஹ்மவஸ்து வொன்றிருக்கிற தென் றறியலாம். இவ்வளவு சொரூபங்களும் தானொருவனே யாகிறா னென்றாலோ, நிர்விகாரனும், ஸமஸ்தஹேய பிரதிபடனும், ஸர்வஜ்ஞனுமான ஈஸ்வரன் கிஞ்சிஜ்ஞத்வாதி குணங்களோடு கூடிய சேதனஸ்வரூபங்களும், கடபடாதி ஜடவஸ்து ஸ்வரூபங்களும் எப்படி யடைவான். ஸர்வசக்திவானாகையால் எவ்வளவு வேஷங்களும் போடலா மென்றாலோ, அக்நி ஜலமாகாதது போல், தனக்கு வேறான பிந்நதத்துவங்களான சிதசித்துக்களாகத் தானாகமாட்டா னாகையால், சித்துக்கு அந்தரியாமியா யிருந்து, அசித்துவை இஷ்டமானபடி பரிணமிக்கச் செய்து, மனிதன் ஒரு கவசத்தில் நுழைந்ததுபோல் அதில் பிரவேசிப்பன். அப்படி வேடம் பூணுவதுங்கூட வேறொருவ னிமித்தியமா யிருக்க வேண்டுமே யன்றி தன் நிமித்தியமாகாது. எதினாலெனின், ஒருமனிதன் தன்னையன்றி பிறனற்றவிடத்தில் எவ்வளவு வேடங்களும்தரிப்பானா? தரித்தாலும் அதைப் பார்க்குமவர்க ளில்லாமையால் பயனற்றதாய்ப் போகும். தான் தரித்த வேடம் பிறரில்லாமல் தானேயிருந்தால் தனக்கது சித்திரமாய் ரஸிக்குமா? எவ்வளவும் ரஸிக்கமாட்டாது. ஆகையால் ஈஸ்வர னப்படிசெய்வதற்கு ஒருபயித்தியக்கார னாகானென்று சிறுவருக்குந் தெரிந்திருக்கும். பிரணவம் விசாரணையற்றதசையில் ஓரே அக்ஷர மென்று பிரமைகொண்டாலும், விசாரணை தசையில் அகார உகார மகாரங்களென்கிற மூன்றக்ஷரங்களுடன் கூடியிருப்பதுபோல விசதமாகின்றது. அந்த மூன்றக்ஷரங்களும் பிந்நஜாதங்களே யல்லது ஓரே ஜாதி யன்று.

அவ்வண்ணமே ஈச்சுவரனும் சிதசித்துக்களுடன் கூடியிருக்கிறானே யன்றி, அந்த சிதசித்துக்கள் தானாகவில்லை. ஆகையால், தத்துவத்திரயம் நித்தியமென்றறிவதே முக்கியமான யதார்த்த ஞானம். உலகத்திலிருக்கும் பண்டிதரும், பாமரருஞ் சுகத்தை அபேக்ஷிப்பார்களன்றோ? ஆனால், கேவல் பாமரர்கள் இம்மையின் சுகத்தைக் கோருகிறவர்களா யிருப்பார்கள். அது துக்கமிசிரமாய், அற்பமாய், அநித்தியமா யிருப்பதாகையால், அதைக்காட்டிலும் நீடூழிகாலம் சுகந்தருஞ் சொர்க்காதி போகங்களை யடைய வேண்டுமென்று யாகம், தபம் முதலிய கர்மானுஷ்டானங்களைச் சிலர் செய்வார்கள். "க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விசந்தி" என்று கூறியபடி, புண்யமிருக்குமளவே அப்போகங்களிருக்குமென்று, அவைகளை அபேக்ஷிப்பதைத் தவிர்த்து சுக துக்க சூனியமான சுழுத்தியவத்தையாகும் பிரகிருதி வியுக்த ஆத்துமாநுபவம் சருவகாலமு மடையலாமென்று, அதற்குச் சாதனமான ஞானயோகாப்பியாசத்தில் சிக்கிக்கொண்டு இருப்பார்கள். இவர்களைக் கேவலரென்று கூறுவார்கள். இவர்களடையும் கைவல்லியத்தைக் காட்டிலும், பரமமாய், அப்ராக்ருதமாய், சுத்த ஸத்வமாய், "த்ரிபாதஸ்யாம்ருதந்திவி" என்று கூறப்படும் பரமபதத்தில் உத்தமோத்தமராய், நிர்ப்பயரான பிரபந்நாதிகாரிகள் "ஸதாபஶ்யந்தி" என்பதுபோல அடையும் பகவதநுபவரூப நித்தியாபரிச்சிந்ந சுகாநந்த ஸ்திதியே யாவற்றிலும் மேலானதாகும்.—(வரும்.)

சைவமதம்.

சிரத்தையும், பஞ்சாக்ஷரமும்.

சைவருக்குச் சிவபிரானருளிய வேதாகமவாக்கியங்களிரண்டுங் கர்த்தவ்வியம். ஆனாலும், ஆகமவாக்கியம் விசேஷ தருமமாகும். வேதவாக்கியம் சாமானியதருமமாகும். இங்ஙனமே தேவர்களும், ருஷிமணிகளுஞ் செய்த ஸ்மிருதேதிகாசபுராணவாக்கியங்களும் ஆப்த பிரமாணமாகமாட்டா. ஆகவே, ஆகமந்தவிர மற்ற நூல்களெல்லாம் மயக்குநூல்களென்று கண்டிக்கப்பட்டன. ஆதலால், சிவபெருமான் நேரே யருளிய திருவாக்காகிய ஆகமசாரமே எழுத்தினாற் சுருக்கமாயும், பொருளினாற் பெருமையாயும், இராகத்துவேஷமுடைய ஆன்மாக்கள் கூறியபடி விபரீதமில்லாததாயும், பதியையும் ஆன்மாக்களையும், அண்டபேதமாகிய பாசத்தையும் அறிவிக்கிறதாயுமிருக்கும். இவ்வாகமத்தில் தானம் யாக முதலிய சற்கருமங்கள் கூறுகையாலே, போகத்தையும், போகமநுபவித்தபின் புநர்ஜனனமில்லாத மோக்ஷவழிகளையுங் காட்டும்.

மோக்ஷமடைய விருப்பமுள்ள சீவர்களுக்கு சிரத்தையே முதலாகும். சிரத்தை யென்பது பக்தி, பாவனை, பரமப்பிரீதி, சிவதர்ம சிந்தனை, பிரதிபத்தி என ஐந்துவகைப்படும். யாகம், தபசு, தானம் முதலியவற்றைச் செய்தாலும் சிரத்தையில்லாவிடத்து பிரயோஜன மற்றதாகும். சிரத்தையுடன் சொற்பமாகிலும் தான முதலியவற்றைச் செய்யின் மிகுந்த பலத்தைக் கொடுக்கும். இவ்வண்ணம் சிரத்தையை மூலமாக்க் கொண்டு, சிவபிரானருளிய வாக்கியத்தைப் பிரீதியுடன் கேட்பதினால் இம்மையின் துக்கமொழியும், மனம் புத்தி சித்த மகங்காரஞ் சுத்திபெறும்; பொய்யகலும்; மெய்நிரம்பும்; பிறப்பெடுக்குந் துக்கமறும்; சிவபெருமானது திருவடி நிழல்படும்; சென்மகன்ம மொழியும்; சிவபெருமான் பதியென்னும் ஞானமுண்டாகும். தீபமானது உலகத்துப் பதார்த்தங்களை விளக்குவதுபோல, ஆன்மாக்களுடைய இதய கமலத்திற் பதிபதார்த்தமுதலிய பொருள்க ளியாவும் விளங்கும்.

சிவபெருமானுடைய "நமசிவாய" என்ற பஞ்சாக்ஷர மந்திரமே ஆன்மாக்களுக்கு ஆதரவென்பது சிவாகமத் துணிபு. அப்பஞ்சாக்ஷரத்தையே, ஆதியில் ஓம் எனவும், அந்தத்தில் சிவாய எனவும், நடுவில் நமஃ எனவுங் கூட்டி மூன்று பதங்களாக உச்சரிப்பதாலும், எம்மந்திரமும் மூலமான ஓம் என்னும் பிரணவமின்றி உச்சரிக்கப்படா தாகையாலும், மூலத்தைச்சேர்த்து ஆறக்ஷரமாகக் கொள்ளப்படும். மூலமாகிய ஓம்நீங்கவே, "நமசிவாய" என்னும் பஞ்சாக்ஷரமே யுரியதாம்; எனினும் ஓம் என்னும் பதத்தின்பொருளை விளக்குவதே பஞ்சாக்ஷரமாகும். ஆகவே, பஞ்சாக்ஷரம் ஓமென்னும் மூலாக்ஷரத்திலொடுங்கியதாகும். அப்பஞ்சாக்ஷரமும் சிவபெருமானுடைய ஈசானம் முதலிய சக்திகளாம். இந்தப்பதங்களாலே அந்தப் பொருளைக் கருதியுச்சரிக்கில் ஆன்மாக்கள் எக்காலத்தேனும் போகமோக்ஷங்க ளிரண்டையு மடைவர்.

ஓமென்னும் ஏகாக்ஷரத்தினின்று வேதசாகைகள், ஆலம்விதையினின்று சாகோபசாகைகளுண்டாவதுபோலத் தோன்றும். ஓமென்னும் பதத்தை யுச்சரித்தவர்களே வேதாந்தங்களையுணர்ந்தவர்கள். ஓமென்னும்பதத்தினின்ற சிவத்தையறிந்தவர்களே வேதாந்தங்களிற்கூறும் பொருள்களை யுணர்ந்தவர்கள். அப்படியறியத்தக்கவர்கள் பிரம்மஞானிகளாகும் அந்தணவகுப்பையுடைவர்களாம். ஆகையால், பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரஸ்திரீகளும், சற்சூத்திரரும் ஓம் என்னும் பதத்தை யுச்சரிக்கத் தகுந்தவர்களல்லர். ஆனாலும், ஓம் என்னும் அக்ஷரத்தை நீக்கி, "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்தையே இவர்கள் உச்சரிக்கத் தகுந்தவர்கள்.

உலகத்தின்கணுள்ள இருளைப்போக்குவான் வேண்டி பிரகாசிக்குஞ் சூரியனில்லையின், கண்ணானது தனக்கியல்பாயுள்ள ஒளியிருப்பினும் அது ஒரு பொருளிடத்தும் பொருந்திக் காண மாட்டாது. அதுபோல பஞ்சாக்ஷரத்துக்குச் சூக்குமமாகிய ஓங்காரம், கருவிகரணங்களுடன் கூடியிருக்கும் ஆன்மாவுக்குப் பொருந்தாவிடத்து, ஆணவவிருளை நீக்கிக்கொள்ள முடியாது. ஆகவே, அவ்வோங்காரப் பொருளையும், சிவபெருமானருளையும் உபதேசிக்கும் பரமாசாரியர்களை, ஓங்கார சொரூப மூர்த்திகளேயென் றுணர்ந்தவர்கள், மலமாயாகன்மங்களை நீங்கினவர்களாவார். ஆதலால், ஓங்காரம் "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யாங்காரங்கள், செவ்வியவிந் துநாதஞ் சித்தமோ டுள்ளமாகு, மொவ்வெனு மெழுத்தாமைந்து மூணர்வுதித் தொடுங்குமாறு, பவ்வமுந்திரையும்போலும் பார்க்கிலிப்புண் புந்தோன்றும்" என்று சிவஞானசித்தியார் சூத்திரத்திற்கூறியபடி, அகாமுதலியஅக்ஷரங்களைக் கொண்டு காரியப்படுத்தியிருப்பதுபோல மனம், புத்தி, ஆங்காரம் முதலியவைகளும் ஒன்றினொன்று உதித்தொடுங்குவதா யிருக்கும்.—(வரும்.)

ஆரியமததூஷணபரிகாரப் பிரகரணம்.

ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும், (ஓர் பிரசங்க பங்கமும்.)

(உஅ-ம் பக்கத்தொடர்.)

(c) "சிவன்=மங்களமூர்த்தி, ஞானமூர்த்தி, ஆநந்தரூபி" என்று சொல்வது, மங்களத்தையும், ஞானத்தையும், ஆநந்தத்தையும், பரமாத்துமாவினால் கொடுக்கப்பெற்ற, இடையில்வந்தேறிய பெயர்களாம். விஷ்ணுவுக்கு, "ஶாஶ்விதம் ஶிவ மச்யுதம்," "விஷ்ணு மோங்காரகம்யம்," "மங்களம் பகவான் விஷ்ணு," "ஹரிஃ ஓம்" எனப் புகழ்ந்திருக்கின்றமையால், மங்களம், ஞானம், ஆநந்தம், அழிவில்லாமை முதலியவை எஞ்ஞான்றும் இயல்பாய் சிந்தித்துள்ளனவாம்.

"சங்கரன்=(ஆன்மாக்கட்கு) சுகந்தருபவன், க்ஷேமம் செய்பவன்" என்பது எமக்கும் உடன்பாடே. எங்ஙனமெனின்:—

"అవిముక్తే తవక్షేత్రే సర్వేషాం ముక్తిసిద్ధయే ।
అహంసన్నిహితస్తత్ర పాషాణ ప్రతిమాదిషు ॥
క్షేత్రేస్మి న్యోర్చయే ద్భక్త్యా మంత్రేణా నేనమాం శివ ।
బ్రహ్మహత్యాది పాపేభ్యో మోక్షయిష్యామి మాంశుచః ॥"

என்று, சிவபெருமான் காசியி லிறப்பவர்கட்கு தாரகமந்திரத்தை யோதி மோக்ஷத்தைக் கொடுத்துக்கொண்டும்,

"హస్తేక్షమాలా హృది రామతత్త్వం ।
జిహ్వాంగ్ర జాపో వరరామ మంత్రం ॥"

என்று, பகவானாகிய ஸ்ரீவிஷ்ணுபக்தி பரவசராயு மிருப்பதினாலே யாம்.

"ஈச்சுவரன்=ஸர்வஜ்ஞத்வாதி ஐசுவரியம் இயற்கையே யுள்ளவன்." என்பதும்,

"జ్ఞానశక్తి బలైశ్వర్య వీర్య తేజాంస్య శేషతాం ।
భగవచ్ఛబ్ద వాచ్యాని వినాహేయై ర్గుణాదిభిః ॥"

என்று, விஷ்ணுபுராண வாக்கியத்தால், ஸ்ரீவிஷ்ணுவுக்கே யுரியதாமென்க.

"விஷ்ணு எங்கும் வியாபித்தவன்" என்று சர்மாவே, வேறுவிதமாகப் புரட்ட விதியின்றிசொல்லிவிட்டபடியால், இப்பரிபூரணப் பெயரொன்றினாலேயே எல்லாப்பெயரும் ஒன்றியிருப்பதை யுணர்க. வியாப்பியம் சரீரியாகிய உயர்ந்த கடவுட்கேயன்றி, சரீரகராகிய ஏனைய விதிசிவாதிகட் குரியதன் றென்பது வேதாந்த சம்மதம்.

"வாசுதேவன்=வசுதேவன்மகன்" என்று மிகவுங் கஷ்டப்பட்டுப் பொருளுரைத்தார்.

பாரதத்தில்;

"ఛాదయామి బృహద్విశ్వం భూత్వా సూర్య ఇవాంశుభిః ।
సర్వభూతాధి వాసశ్చ వాసుదేవ స్తతః స్మృతః ॥
వసనాత్సర్వ భూతానాం వసుత్వా దేవయోనిషు ।
వాసుదేవ స్తతోజ్ఞేయో యోగిభి స్తత్త్వదర్శిభిః ॥"

விஷ்ணுபுராணத்தில்,

"సర్వత్రాసౌ సమస్తంచ వసత్యత్రేతి వైయతః ।
తతస్స వాసుదేవేతి విద్వద్భిః పరిపఠ్యతే ॥
సర్వాణి తత్రభూతాని వసంతి పరమాత్మని ।
భూతేషుచ ససర్వాత్మా వాసుదేవ స్తతఃస్మృతః ॥"

என்றுரைத்தபடி, எல்லாவஸ்துக்களிலும் நிறைந்து வாசஞ்செய்கின்றவ னென்கிற பொருளைக் காணாது மயங்குகின்றவர், பதங்களின் தாதுவிற்பத்திகளை யெங்ஙன மறிவர். வாசுதேவனுக்கு மகனாக விஷ்ணு கிருஷ்ணாவதாரஞ் செய்யாததற்குமுன் வாசுதேவன் என்கிற பெயர் இல்லையென்றறிந்தார்போலும். கிருஷ்ணனுக்குத் தகப்பனாயமர்ந்த வாசுதேவனுக்கு, எக்காரணம்பற்றி வாசுதேவ னென்று பெயரிடப்பட்டது? அது சாக்ஷாத் நாராயணனாகிய வாசுதேவன் பெயரன்றோ?

"கிருஷ்ணன்=கறுத்தவன் அல்லது தைத்திரியர்களைக் கர்ஷிப்பவன், அல்லது எல்லாம் செய்பவன்" என்று, ஆராய்ச்சியற்ற பொருளைக் கூறினார்.

"కృషిర్భూవాచక శ్శబ్దోణశ్చ నిర్వృతి వాచకః ।
విష్ణు స్తద్భావ యోగాచ్చ కృష్ణో భవతి శాశ్వతః ॥
సత్యం కృష్ణో జగన్నాథ శ్శుద్ధ స్ఫటిక సన్నిభః ।
కర్షామి పృథివీం పార్థ భూత్వా కార్ష్ణాయసో హలః ॥
కృష్ణో వర్ణశ్చ మేయస్మా త్తస్మాత్కృష్ణోహ మర్జున ॥"

என்று கூறியபடி, கிருஷிசெய்வதுபோல, சாசுவதமாக உலகத்தை உத்தரிக்கிறவ னென்றும், சதாநந்த சத்தியஸ்வரூபங்களே கிருஷ்ணவர்ணமென்றும் விளக்கியிருப்பதைக்காண்க.

இன்னும் ஸ்ரீவிஷ்ணுவின் பெயர்க்குரிய பொருள்களை ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்திற் குண்டான அத்வைத, விசிஷ்டாத்வைத பாஷ்யங்களிற் காண்க.

இத்தியாதி மேலான வுண்மைப்பெயர் விளங்கும் விஷ்ணுவை "பாசகாரியமாக நிறைவு, பிறப்பு, நிறம் முதலியவற்றால் சுகத்துக் குட்பட்ட ஆன்மப்பெயர்" உடையவரென்று, சர்மாகூறியது அறியாமையும் பொறாமையுமே யாம்.

(*d*) "சிவன் என்பது ஆண்பாற்பெயர். இது போலவே,

பிரம்மம் - பிராம்ஹீ;
சங்கரன் - சங்கரி;
சம்பு - சாம்பவி;
நாராயணன் - நாராயணி;
விஷ்ணு - வைஷ்ணவி;
சங்கரன் - சக்தி;

என்பன, ஓரேபகுதியடியாகப்பிறந்த ஆண்பால் பெண்பாற் பெயர்கள். இவற்றுள் சிவபெருமான் பெயர்களும் அவருடைய சக்தியாருடைய பெயர்களும் ஓரேபகுதியிலிருந்து பிறந்துள்ளன. ஆனல் வைஷ்ணவி - விண்டுவின் பெண்டீரல்லள்; நாராயணி - விண்டுவின் பெண்டீரல்லள். ஆதலால், ஆன்மாக்களுக்கெல்லாம் ஆணுகவோ பெண்ணுகவோ இருந்து அருளக்கூடிய ஸ்வ சக்தி ஆத்மகன் ஸ்ரீசிவபெருமானேயன்றி, விஷ்ணுவல்லர் என்பது துணிபு" என்று சர்மா யுக்திப் பிரசங்கம் புரிந்தார்.

இந்தயுக்திப்பிரசங்கம் சாஸ்திரப்பிரமாணங்களுக்கு நிற்கின்றதா பார்ப்போம். அவர் காட்டியபடி, ஆண்பாற் பெண்பாற் பெயரொன்றியிருக்கவேண்டு மென்பது ஏகதேசமாகும். சிவ - சக்திபெயர்களில் பிரம்மம், விஷ்ணு, நாராயணன் முதலிய பெயர்களைச் சிவனுக்குரிய பெயராகவே யாண்டுகொண்டார். அப்படி சிவனேயாகுங்கால், விஷ்ணுவாதி நாமங்களைப் பற்றித் தூஷிப்பது அஞ்ஞானமன்றோ? அல்லது சிவத்தின் பெயராகிய பிரம்மம், விஷ்ணு, நாராயணன், நாமங்கள் வேறு; விஷ்ணு, நாராயணன் என்று வைஷ்ணவர்கள் பரத்துவமாகக் கொள்ளும் நாமங்கள் வேறு என்று சர்மா கொண்டதென்றூலோ, அவ்வண்ணங்கொள்ளுவதற்குச் சாஸ்திரங்க ளிடங் கொடா தென்று முன்னெழுதியவைகளிற் காட்டிய பிரமாணங்களாலே விசதமாகும்.

சைவசாஸ்திரத்தில், பரமசிவம் தானேசிவத்துக்குச் சத்தியும், நாதத்துக்கு விந்துவும், சதாசிவனுக்கு மனோன்மணியும், ஈச்சுரனுக்கு மகேசையும், உருத்திரனுக்கு உமையும், மாயனுக்குத் திருவும், பிரம்மனுக்கு வாணியும், சக்திசக்தனுக வருவனென்று சொல்லியிருக்கிறதே யொழிய பிறிதில்லை. சைவசாஸ்திரத்திலும் அப்பியாசமில்லாத சர்மா மருண்டெழுதியபடி, எங்குங் கிடைக்க மாட்டாது.

ஆயினும் அவர்காட்டிய ஆண்பாற் பெண்பாற் பெயர்களைச் சற்று யோசிப்போம்.

"బ్రాహ్మీతు భారతీ భాషా గీర్వాణీ సరస్వతీ ॥"

என்று, பிரம்மனுடைய சக்தி பிராஹ்மீ யெனச் சரச்சுவதிக்கு கூறியிருக்கின்றதேயன்றி, உமையாளுக்கன்று. அப்படி பிரஹ்மா - பிராஹ்மீ என்று சொல்லினலும் பொருந்தும்.

"శంభు ర్ధాత్రా హరి శ్శివః ॥"

"சம்புவே - - - சங்கரனயன்மால்"

என்று, பக்தர்களுக்குச் சுகத்தைக் கொடுக்குமவரெல்லாம் சம்பு என்று பெயருள்ளவ ராகையால், சிவனுக்கே சம்பு என்பது ஆதரவற்றதாலும், சங்கரனென்பதும் அதிலொடுங்கியதாலுமுணர்க.

"నారాయణీ రమా గౌర్యో ......"

என்று, நாராயணி என்பதற்கு லக்ஷ்மீ, கௌரி என்று பொருளுண்டா யிருக்கின்றமையால், விஷ்ணுவாகிய நாராயணனுக்கே கருணை சக்தியான லக்ஷ்மீ யென்னும் நாராயணி பெண் தத்துவமாயிருக்கின்றாள். ஆயின், கௌரி யென்றும் பொருளிருக்கின்றதேயென்றால், நாராயணனுடைய மாயாமிசையே காளியாக அவதரித்தமையாலும், சிவன் தனக்கடங்காத மாயாம்சையைக்கண்டு மோகித்து, அவளுடன் கூத்தாடி பெண்டீராகக் கொண்டதாலும், நாராயணனுடைய மாயாமிசைக்கு நாராயணி யென்று பெயரமையப்பெற்றது.

வைஷ்ணவி என்கிற பெயரும், நாராயணிக்குப் பரியாயப் பெயரே யன்றி வேறன்று.

இதற்குச் சரித்திரம் கிருஷ்ணவதார காலத்தில் விஷ்ணு மாயாமிசை அசோதை வயற்றிற் பிறந்து கம்சனுடைய வாளுக் கிறையாகாமல் ஆகாயத்தில் எண்டோளியாக நின்று சருவருடைய அபீஷ்டங்களையும் பூர்த்தி செய்யத் துர்க்கையாய் நின்றதைக் காண்க.

சங்கரனுக்குச் சங்கரி; சங்கரனுக்குச் சக்தி; என்று ஒரு சக்தனுக்கு இரண்டு சக்தியைக் கற்பித்துத் தட்டுத் தடுமாறியதால், சர்மாவின் ஜாலத்தை விசேஷமாகக் கண்டிக்கவேண்டிய அவசியமில்லை.

இதுகாறும் நாம்செய்த பிரசங்கபங்கத்தினல் உலகவழக்குச் செய்யுள் வழக்காலும் ஸ்ரீவிஷ்ணுவே உயர்ந்தபொருளென்று நிலைநாட்டினோமாக.

(இன்னும் வரும்.)

தி. பாவஸ்து சேஷாத்திரி அய்யங்கார்,
பல்லாரி.

பொதுப்பிரகரணம்.

புதுவை - ஏ. வே. விலக்ஷணகவி
ஸ்ரீமாந் - இராமாநுஜநாவலராவர்கள்
இதோபதேசத்திற் கிணங்கிய,

விஸமாதர் விலக்கம்.

காப்பு.

சிலைமாதென வாக்கிய சிற்பரனை
நிலையாக நிறுத்துள மாறபிரான்
றலையான மலர்க்கியை தாணினைவேன்
விலைமாதர் விலக்கம் விளம்பிடவே.

நூல்.

சுத்த ஸாத்விக பரதத்வ யாதாத்மிய ஞான
பக்தி வைராக்கிய மானசீகராய், ஸமதமாதி கல்
யாணகுண பரிபூரணராய் எழுந்தருளி யிராநி
ன்றுள்ள எமது பரமாசாரியரோ! கிடைத்தற்க
ரிய இம்மானிடப்பிறவியிற் பிறந்துள்ளமனிதன்
முத்திவீடடைதற்கு மிகவும் பிரதிகூலமாயுள்
ள தெதுவோ அதையும், அநுகூலமாயுள்ள தெ
துவோ அதையும், அதிசங்கிரகமாய் அருளிச்
செய்யவேண்டு மென்று பிரார்த்திக்கின்ற ஓர்
அறிவுள்ள மாணக்கனைக் குளிரநோக்கிய ஓரா
சாரியர் இவ்வண்ணம் அருளிச்செய்கிறார்:—

வாராய் விதிநிஷேத விவேகியே! கர்ப்ப,
ஜன்ம, பால்ய மென்கிற மூன்றவஸ்தைகளுக்குந்
தப்பிப்பிழைத்து எவ்வன பருவத்தை யடைந்த
மனிதன் ஐந்தாமாண்டில் உபாத்தியாயரிடத்
தில் தாய்தந்தை முதலியோரால் தன் ரக்ஷணார்
த்தமாய் அடையப்படுகிறான். அப்போது அவ்
வுபாத்தியாயர் இவன் கையைப்பிடித்து நோக்கி
மிகுந்த தயையோடு இப்பூமியில் நீ வந்து பிறந்
தது இதற்காகவன்றோ, இதையுணர்ந்து பிழை
த்துக் கொள்ளடா மகனே! என்று தன் திரு
வாய் மலர்ந்து இவன் செவிகளினும் நாவினும்
நன்றாய்ப் படிந்து விளங்கும்படி ஹரி: ஓம்,
நன்றாக, குருவாழ்க, குருவேதுணை என்றும்,
அரிநமோத்துசிந்தம் என்றும், பத்மகர்ப்ப கும்ப
சம்ப வாங்கிரீசராதிகளானமஹான்கள் தொடக்க
மானால் ஜபித்துக்கொண்டிருக்கின்றதை உப
தேசித்தருளுகிறா ரல்லவா? அவ்வர்த்தத்தை
அப்பருவத்திலேயே யுணர்ந்து நற்கதியுற்றவர்
கள்முன்னாளில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும்
பிரகலாத நாரத புண்டரீக சநக சுக சௌநக
வாமதேவ வசிஷ்டாதிகளு மன்றோ? அப்படி
யே உஜ்ஜீவிக்க மற்றவர்களுக்கு அஸக்கியமாக
விருந்தபோதிலும் உசிதமாகும் லௌகீக வைதீ
காது குணமான கல்வியைப் பயிற்சிசெய்துக்
கொண்டு தன் குலகோத்திரசூத்திரக்கிரமங்களை
அவலம்பித்துக்கொண்டு நல்ல மனத்தன்பர்க
ளுடைய நேயத்தை யுடையவனாய் "மருவுக மா
சற்றார் கேண்மையொன் றீத்து-மொறுவுக வொ
ப்பிலார் நட்பு" என்ற திருவள்ளுவர் நீதிவாக்
கியப்படிக்கு இருப்பவன்றான் மோக்ஷாநுகூல
மான புண்ணிய சீலனென்று யாவருங் கொண்
டாடக் கடவனாவான். நல்ல தெளிவான கல்வி
யும், அறிவும், ஆசாரமும் "அடக்க மமரருளுய்
க்கு மடங்காமை, யாரிருளுய்த்து விடு" மென்
றபடிக்கு அடக்கமும், வணக்கமும், விநயமும்,
விவேகமும், மிருதுவான வசனமும், சாந்தமும்,
பொறுமையும், கருணையும், தயையும், தர்மமும்,
எம்பெருமானை வழிபடுதலில் நியமும், சத்கால
க்ஷேபத்தி லவாவும், சாத்வீகவிஷயத்தில் நம்
பிக்கையும், சத்தியமும் இவைமுதலான நற்கு
ணங்களை யெல்லாம் அநுகூல குணங்க ளென்
றும், விதிவாக்கிய குணங்களென்றும் கைப்பற்
றிக்கொண்டு வரக்கடவனாவன். காமக்குரோத
லோபாதி தீயநிஷேதக்கூட்டங்களெல்லாம் பிர
திகூல குணங்களென்று நன்றாய்விட்டு நன்மை
யையே நாடத்தக்கவன் எவனோ அவன்றான் சரி
யான புருஷஜன்மமுள்ள மனிதனென்று பெரி
யோர்கள் நினைக்கிறார்கள்.

ஓய் அரிபதாம்போருக மத்த சித்த பக்தரோ!
எப்போது பதினான்கு வயது நிறைம்பிற்றோ
அப்போதே தீதான பாபகுணங்க ளென்கிற
பக்ஷிஜாலங்க ளெல்லாம் இவன் மனமாகிற பழ
முள்ள விருக்ஷத்திற் குடியேறிக் குலவிவாழத்
தலைப்படுகின்றன. இந்த கௌமார பருவந்தான்
நிரதிசயாநந்த மோக்ஷ சாம்பிராச்சியத்தை
யடைவிப்பிக்கத் தக்கதும், கைவல்ய ஐசுவரிய
சுவர்க்காதிகளை யநுபவிப்பிக்கவல்லதும், ஜனன
மரண நரகங்களாகிற நிர்வதிக துக்கசாகர சம்
சார தாவாநலத்தில் கிடைப்பிக்கக் கடவதுமா
னதென் றுணரக்கடவீர். "இளமொளி யிளமை
கெடுவதன் முன்னம், வளமொளி மாயோன் மரு
வியகோயில், வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்
சோலைத், தளர்விலராகிற் சார்வது சதிரே" என்
று ஆழ்வாரும், "நரைவரு மென்றெண்ணி நல்
லறிவாளர், குழவியிடத்தே துறந்தார்" என்
றும், "எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்
றைக் கடந்தெளிதி லேறவல்லோர், அத்திறத்
தோரேபுருட ரவர்களேதொழற்குரியோ ரவரோ
சான்றோர்" என்றும் வாசிஷ்டஞ் சொல்லுகிற
படியே, இந்த இளையவயதுள்ள காலத்தை நன்

ருக நடத்துவது மிகவும் அருமையாகவும் அறி
வுடையோர்கடமையாகவும் இருக்கின்றது. இத
ற்கு எம்பெருமானுடைய நிரோதுக ஜாயமான
கடாக்ஷம் வேண்டும். இதில் ஓர் விவேகியான
வன் வெகு ஜாக்கிரதையாக விருக்கின்றது எப்
படிப்பட்டதாமெனில், கடலில் கல் மிதப்பது
போலே என்று சொல்லுகிறார்கள்.

* * * * * * *

ஆதலால், அமைதியோடு நல்ல நூல்களையும்
இம்மைக்குரிய தொழில்களையும் விசாரித்து பிர
மசரிய விரதத்தினின்றும் கிரகாச்சிரம ஸ்வீகா
ரஞ் செய்துக்கொண்டு இல்லறத்தானாகி வாழ
வேண்டியது முக்கியமானமோக்ஷதர்மம். பிறகு
துரியாசிரமமானது "அறமெனப்பட்டதே யில்
வாழ்க்கை, யஃதும் பிறன்பழிப்ப தில்லாயி ன
ன்று" என்றபடி சுருதி ஸ்மிருதேதிகாச புரா
ணங்களிற் கூறிய சந்நியாசாசிரமத்தை ஸ்வீகரி
த்துக்கொண்டு அந்நியமங்கடவாமலிருந்து அநு
ஷ்டிக்கும் பக்ஷத்தில் அஃதும் நல்லதேயாகி
றது. அஃது அசாத்தியமாதலால் கலிகாலத்
தில் விசேஷ தர்ம்மமாக வெடுக்கவில்லை என்
றுணர்வீராக.

வாரீர் நன்மை விசாரிக்கவந்த நற்றவ புத்
திரரே! "காதலிருவர் கருத்தொருமித்து-ஆதர
வுப்பட்டதே யின்பம்" என்ற நீதியை அநுசரி
த்து வருதலே நல்லதாம். இப்படிக்கு நடவா
மல் நல்லவர்களுடைய சாவகாசத்தை யிழந்து,
தங்கள் பெரியோர்களையும் குலத்தையும் பண
த்தையும் புண்ணியத்தையும் பாழாக்கிக் கல்
வியற்ற மூடக்குழாத்திற் புகுந்து, அந்தோ!
மஹாவிகாரிகளாய்த் திரிவது தக்கதன்று. நல்
லோரையும் தெய்வத்தையும் தாய் தந்தை அண்
ணன் தம்பி முதலானோரையும் நிந்திக்கக் கூடா
து. கூடுமானவரையிலும் அவர்களை வஞ்சகமி
ன்றிக் காப்பாற்றிப் போற்றி வரவேண்டியது.
வயது முதிர்ந்தாரையும் பிராமணுதி வித்வஜன
ங்களையும் கௌரவப்படுத்த வேண்டியது. அறி
ஞர்களை அவமானம் பண்ணப்போகாது. "சூது
ம்வாதும் வேதனைசெய்யும்" என்கிற வாக்கியத்
தை மறந்த பாவிகளோடு பழகலாகாது. கொலை
களவு கட் காமாதி மஹாபாதகங்கட்குப் பயப்ப
டவேண்டும். இயமனும் நரகமும் ஜனன மர
ணதுக்கங்களும் உண்டென் றுணரவேண்டும்.
"நலக்குரியார் யாரெனி னமநீர்வைப்பிற், பிற
ர்க்குரியா டோடோயாதார்" என்ற நீதிநூல்க
ளை யநுசரித்து நடக்கவேண்டியது. முன்னோர்
களியற்றிய சாஸ்திரங்களை வாசிக்கவேண்டியது
கர்த்தவ்யம்.

ஓய் புத்தியுள்ள புண்ணியவானே! முடிவான
வசன மொன்றுண்டு. அதாவது "காமனெவ
னுக்கும் மூத்தவனும்" என்றபடி அக்காமமா
னது மிகக்கெட்டது. அதுக்குப் போக்கிடமா
கத் தன்மனையாளை நியமிக்கப்பட்டிருக்கின்றது.
அவளைவிட்டு அன்னியர் பெண்களைத் தழுவு
வது பெரிதான பாவமென்றுணருவீராக. இந்த
தர்ம்மமான விகிதபோகத்தை விட்டு யாதொரு
மனிதனானவன் பார்ப்பான்முதல் பறையன்வரை
யிலும் புணரக்கூடுமான வேசை என்கிற விலை
மாதர்களைப் புணருகிறானோ அவன்றான் சகல
கோடி நரகங்களுக்கும் ஜன்மங்களுக்கும் பீஜ
மாகிறான். இதிற் சமுசயமில்லை. அந்த மாயப்
பசாசுகளின் மோசவிலாசங்களைச் சொல்லிநினை
க்கின் மிகுந்தஅசுத்தமாயும், ஹேயமாயும் அரு
வருப்பாயும், நகைப்பாயும், தகாததாயும் இருக்
கிறது. ஆயினும் ஒருவன் இரணநோயையாற்ற
வல்ல கருணையுள்ள வைத்தியன் அச்சீழைத்
தன் வாயிற்கொண் டுறிஞ்சி யுமிழ்ந்துவிட்டு
அவிழ்தத்தை யூட்டல்போல் அக்கொடிய வே
சைகளின் மோசவிநோத சரிதைகளை எம்பெரு
மானைச்சொல்லும் வாயினால்சுருக்கமாகச் சொல்
லுகிறேன். இதை முக்கரணக் கோணலறக் கே
ட்பீராக.

ஓய் விவேகியே! இக்கணிகைகளைக்கூடுமவர்
களுக்கு முதல்முதல் நாணமும் மானமும்
வீரியமும் பொருளும் கெட்டுப்போ மென்பதிற்
சந்தேகமில்லை. பிறகு விலங்குகளும் பக்ஷி
களுஞ் சகியாதவண்ணமாய் ஒரு பெண்ணையே
பலபேரும் பார்க்கப் பரியசித்துத் தாடன சும்ப
னலிங்கனக் குறியிட் டுண்ணத் தலைப்படுகிறார்
கள். இது வெகு ஆச்சரியம்! இவர்களை மிகப்
பொறுமைசாலிகளென்று புகழலாம். இதுநிற்க
அப்பெண்களிருக்கு மிடத்தைத் தேடிக்கொண்
டுபோய் சிற்றெறும்புக் கூட்டங்கள் சீனிக்கற்
கண்டில் மொய்த்தாப்போல் நீண்ட முறுக்கு
மீசையுள்ள ஆண்சிங்கங்க ளெல்லாரும் மொய்த்
துக்கொள்ளுகிறார்கள். அவர்களோ இப்புருஷர்
களை நோக்கி உண்ணகை கொண்டு, இவ்வளவு
பேதைகளும், தங்கள் பத்தினிகள் வாயில் ஆப்
பிட்டு நம் அவயவத்திற்கு ஆசைவெறியேறி
எனக் குனக் கென்று சுற்றுக்கா லிடுகிறார்களன்
றோ வென்று, அலக்ஷியக் குறிப்பை யகத்திட்டு,
வெளிநகை வீச்சிட்டு, இம்மந்தைக்குள் பணமா
கிய கொழுமையுள்ள கிடாக்கள் ஏவை என்று
நோக்கி ஒரே பிடியாகத் தங்கள் வாலையாற்
பிடிக்கத் துவக்குகிறார்கள். (வரும்.)

குடித்தனப் பாங்கு.

"குடித்தனமோ, துரைத்தனமோ" என்ற பழமொழிப்படி, நமது இந்துதேசத்துப்பெண்கள் குடித்தனத்துக் குரிய பாரத்தை முற்று மறந்து, நவீனமாக வந்து நுழைந்த சொகுசு நாகரீகத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் புது நாகரீகம் சற்று செல்வாக் குடையவர்களுக்கு நடப்பதே கடினம். நந்தேசத்துப்புருஷர்கள் நான்கு ரூபாய் முதல் நாலாயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்குஞ் சக்தியுடையவர்களாம். அவரவர்கள் வருமானத்தை "ஆற்றிற்போட்டாலும் அளந்து போடவேணும்" என்றபடி, கணக்காய்ச் செலவழிக்கவேணும். அவர்களுக்குப் பெண்டாக அமையும் எல்லாப்பெண்களும் தந்தம் புருஷனுக்குரிய வரும்படி எவ்வளவோ அவ்வளவையே பெருமையாக மதித்து நடப்பதே மேலான தருமமாகும். அதைவிட்டு, புருஷரைக் கடன்காரர்களிடத்தி லொப்பிவைக்க, "உடைச்சேலைதா, குழைக்கோலைதா, விரற்காழிதா, மனைக்கோலிதா, உணச்சோறுதா, தினப்பாகுதா - சமுசாரம், உனக்கேயலால், எனக்கேதடா, உழைத்தாலலோ, பிழைப்பாமடா, உலைக்காரடா, படப்போகிறார்" என நம்பெண்கள் அங்கிலேய ஸ்திரீகள் நடையுடை பாவனையைக்கண்டு அவர்கள்போல் தாதிமார்களையுஞ் சமையற்காரர்களையும் அமைத்துக் கொண்டு, தாம் நல்லுடை யுடுத்தி, விலையிலா ஆபரணங்கள் பூண்டு குடித்தனத்தைக் கவனிக்காமல் இருப்பது மிகவும் கொடியதாகும். இவர்கள் எண்ணம்போல் புருஷர்களும் அவர்கள் வாக்சாதுரியத்திலும் மேனியழகிலும் ஈடுபட்டு, "மனைகளெடுக்க வேணும், உடைகளுடுக்க வேணும், மணியணி மெய்க்கு வேணும்" என்று திரிந்து கெடுகின்றார்கள். குடித்தன மானது புருஷனும்பெண்சாதியும் ஒத்துநடப்பதேயாம். இவ்விருதிறத்தாரும் குடித்தனத்தைக் கைவிட்டு உல்லாச விலாச நாகரீகங்களைக் கைக்கொள்ளுவார்களானால், தங்கள் வருவாய்க்கு மிஞ்சி ஆடைக்கும், ஆபரணங்களுக்கும், பெருந்தீனிக்கும், சிற்றுண்டிக்கும், மற்றுமுள்ள வீண் செலவுகளுக்கும் கடன் வாங்கி கஷ்டப்பட வேண்டியதாய் நேரிடும். இதனால் அவர்கள் முதல் எந்த நாகரீகத்தை அநுசரிக்க முயன்றார்களோ, அதற்கு முழுதும் விரோதமாய், குடிக்கக்கஞ்சியும் குண்டிக்குத் துணியுமற்று, கடன்பட்டார் நெஞ்சம்போற் கலங்குவதற் கொத்தும் அவமானத்துக் குள்ளாகின்றார்கள்.

இவைகளை யோசிக்குமிடத்து, புருஷர்களுக்கு மந்திரியைப்போன்ற மனைவிகளே காரணமென்பது தெளிவாய் விளங்கும். ஆகையால், நமதுதேசத்துப் பெண்கள் நன்றாய் ஆராய்ந்து ஆலோசித்துக்கவனிக்கவேண்டும். பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு கிடைக்கும் புருஷன்மார், தந்தம் விதியின்படி யாகத்தான் கிடைப்பார்கள். அதிகசம்பாதனை யுடையவனும், அழகில் மிகுந்தவனும் விசேஷசாமார்த்திய முடையவனும் கிடைக்க வில்லையென்று மனதிலெண்ணித் தாறுமாறாய்க் குடித்தனஞ்செய்வது மிகவும் புத்தியீனம். தங்க ளெண்ணம்போலக் கிடைத்தாலும் ஏதாகிலும் ஒவ்வொரு துர்க்குணங்களிருக்கும். ஆகையால், கிடைத்தமட்டிற் றிருப்தி யடைந்து, அன்றாடமோ, மாதாந்தரமோ, வருஷாந்தரமோ கிடைக்கும் வரும்படியை, நாலுபங்காக்கி ஒருபங்கை மீதியாகச் சேர்த்துவைத்து, மூன்றுபாகத்தைச் செலவு செய்துவரவேண்டியது இன்றி யமையாததா யிருக்கின்றது. அப்போதைக்கப்போது சம்பாதிக்குஞ் சம்பாதனையை செலவுசெய்து விடின், ஓரொருசமயம் அகஸ்மாத்தாக வரும் சுபாசுப காரியங்களுக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கடன்வாங்கியும் அக்கடனைக் கொடுப்பதற்கு பூர்வம்போலவே செலவைச் சுருக்க முடியாமற் போகின்றமையால், கடன்கொடுத்தாரால் குரூரதண்டனையை யடைந்தும், உள்ளதும்போய் ஓய்ந்து, "குந்தினையா குரங்கே, சந்தடியடங்க" என்று, பல்லையிளித்துப் பலரையுங் கெஞ்சி யுட்கார நேரிடும். ஆகையால், வரும்படிக்குத் தக்கபடி செலவுசெய்து கடன்வாங்காது காலங்கழிக்குங் குடித்தனமே துரைத்தனத்துக்குச்சமானமாம். இக்குடித்தனத்துக்கு அரசன் புருஷனும், மந்திரி பெண்சாதியும், மற்ற பந்துவர்க்கங்கள் உத்தியோகஸ்தரும், சேனைகளுமா யிருக்கிறார்கள்.

இக்காரியத்தில் ஏழைகள் முதல் பிரபுக்கள் வரையில், அவரவர்கட்கு வரும் வரும்படியைக்கொண்டு ஜீவிப்பது பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம். ஏழை பிரபுவாவதும், பிரபு ஏழையாவதும் சகஜம். இது அவரவர் விதியின்படி நடக்கும். "குபேரன்பட்டணமாயிருந்தாலும், விறகுவெட்டியு மிருப்பான்" என்றறிந்து, மிதமிஞ்சிய வீணாசையால் குடித்தனஞ் செய்யாமலிருப்பதே பெண்களுக் கழகு. ஆகையால், பெண்கள் கல்வியிற் றேர்ந்து குடித்தனமாகிய துரைத்தனத்துக்கு அங்கமாய் நின்று, பொக்கிஷாதிகாரிகளாகி வரவுசெலவுசெய்து வாழ்வதே நன்மையாகும்.

சரீர சுகத்தின் மேன்மை.

உலகிற்கு முக்கிய ஆதாரம் உயிர். அவ்வுயிர்க்கு முக்கிய ஆதாரம் உடல். உயிரோடு கூடிய இவ்வுடல் இல்லாவிடில் உலகிற்குப் பயன் யாது? ஆகையால் உலகத்தோடுதித்த இவ்வுடலைச் செவ்வையாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையாம். இவ்வுடலானது எல்லா அங்கங்களும் பொருந்தி இயல்பாய் எந்த நிலைமையி லிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தநிலைமையிலிருந்தாற்ருன் "சரீரசுகம்" என்று சொல்லப்படுகின்றது. இவ்வாவி நிலைமை எப்பொழுது தவறுகின்றதோ அப்பொழுதுதான் சுகமின்மை, சுகக்கேடு, சுகத்தாழ்வு எனப் பலவாறு கூறப்படுகின்றது. சரீரசுகமுடையவனெவனே அவனே உலகில் எல்லாக் காரியங்கட்கும் அருகன். அஃதில்லாதவன் யாதொருகாரியங்கட்கும் பயன்படான். "சுவரைவைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்" என்று சொல்லும் பழமொழிபோல், நமது சரீரசுகத்தை அதிக ஜாக்கிரதையுடன் பாதுகாத்துக்கொண்டல்லவோ, உலகில் எல்லாவேலைகட்கும் அருகனுகவேண்டும். சரீரசுகமுள்ளவன் எந்தவேலையைச் செய்தபோதிலும், சுறுசுறுப்பாகவே இருப்பான். அவனுடைய அறிவானது நல்லநிலையில் நிற்கும். எந்தவேலையையும் அவன் வெகு எளிதில் செய்வதுமன்றி அவ்வேலையின் திறனும் நன்ருகவே இருக்கும். வேலையைச்செய்த பின்னர் நல்ல பசியுண்டாம். சாப்பாட்டில் அதிக ருசி கொடுக்கும். இராக்காலங்களில் நித்திரை நன்ருக வரும். சரீரசுக மில்லாதவனுக்கோ இவ்விதமான குணங்களொன்றும் பொருந்தமாட்டாது. அவன் யாதொருவேலைக்கும் பயன்படாதவனுகிருனன்றியில், அவன் உயிர்பெற்றிருத்தலானது அவனேடு சேர்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஓர் பெருஞ்சுமையாக வன்றே யிருக்கும். சரீர சுகமில்லாதவன் ஓர் ஸ்தானத்திரான். அவனது மனம் ஓர் நிலையிலிருக்கமாட்டாது. நல்லபசி இருக்கமாட்டாது. தேவாமிர்தத்தையுண்டபோதிலும், அவனுக்கு அதில் ருசி தோன்றமாட்டாது. இரவில்நன்ருகத் தூக்கம்வரமாட்டாது. எப்போதும் அலறிக்கொண்டும் வருத்தப்பட்டுக்கொண்டுமே இருப்பான்.

இதனல் எப்படிப்பட்டவர்களாயினும்; சரீரசுகமென்கிற ஒன்றில்லாமல் வியாதிகளாற் பீடிக்கப்பட் டிருப்பார்களே யாகில், அவர்கள் கழிக்கும் வாணுள் வீணுள் என்றே மதிக்கப்படும்.

தேள் விஷத்திற்கு மருந்து.

1. கந்தகத்திராவகம் இரண்டொரு துளி கடிவாயில் விடச் சாந்தமாகும்.

2. துப்பாக்கி மருந்து இரண்டு எள்ளளவு கடிவாயில் வைத்து நெருப்பைக்காட்ட மருந்து வெடிக்கும்; உடனே சாந்தமாகும்; இது குழந்தைகட்குச் செய்யக்கூடாது.

3. சுத்திசெய்யாத நவாசாரம் கால்தோலா (கால் ரூபா யெடை) பொடித்து அவ்வளவு சுண்ணும்பும் கூட்டி இடது உள்ளங்கையில் வைத்து வலக்கைப் பெருவிரலால் சரசர வென்று சுறுசுறுப்பாயும் அழுத்தமாயும் தேய்க்க இரண்டொருநிமிஷத்தில் தண்ணீர்போற் கரைந்து அதிககாரமான ஆவியெழும்பும்; சீக்கிரமாகக் கையை மூக்கினிடத்தில் குவித்துப் பிடித்து இருமூக்கிலும் அவ்வாசனையை உறுஞ்சும்படி செய்யவேண்டும்; அவ்வாவி சுறீலென்று மண்டைக்கேறியவுடனே தேள்விஷம் பறந்துபோம். செய்பவர்க்கு யுக்தியும் சுறுசுறுப்பும்வேண்டும். இது குழந்தைகட்காகாது.

4. எட்டிக்கொட்டை (தான்றிவிதை) வெள்ளெருக்கம்பால் (கிடை யாவிடில் காட்டெருக்கம் பால்) விட்டு உரைத்து கடிவாயில் மந்தமாய் ஒரு அங்குலம் சூழப்பூசி கொஞ்சம் நெருப்புச் சூடுகாட்டப் பறந்துபோம்.

5. புதிய எலுமிச்சம்பழத்தை அரிந்து இரு மூடிகளையும் கடிவாயில் அரைமணிநேரம் அழுத்தித் தேய்க்கச் சாந்தமாகும்.

6. "நாகப்பூ" வென்கிற கடைச்சரக்கை ஜலத்திலுரைத்துக் கடிவாயிற்பூசிக் கொஞ்சம்உண்ணக் கொடுக்கப்போகும்.

7. வெண்குன்றிவேர் ஜலம்விட்டரைத்துக் கடிவாயிற்பூசத் தீரும்.

8. கொசுத்தேன் மெழுகை உருக்கிக் கடிவாயில் வைக்க ஒழியும்.

பாம்பு விஷத்திற்கு.

எட்டிக்கனிகள் பத்தெட்டுக்கொணர்ந்து சட்டியிலிட்டு வேப்பெண்ணைவார்த்து அடுப்பேற்றி வேவித்து லேகியம்போல் மத்தித்து டப்பிகளில் வைத்துக்கொண்டு விஷந்தீண்டினேர்க்குத் தூதுளாங்காயளவு உண்ணக் கொடுத்துக் கொஞ்சம் கடிவாயில் பூச நல்லபாம்பு, விரியன் பாம்பு முதலிய எவ்வகைப் பாம்பின் விஷங்களும் பறக்கும். பாஷாணம் முதலிய விஷவஸ்துக்களைப் புசித்தோர்க்கு இம்மருந்து பயன்படா. அது நீலிவேர் மிளகுகியாழத்தால்முறியும்.

வித்தியாபானு.

திருக்குறள் தாற்பரியம்.

(ருக - ம் பக்கத் தொடர்.)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்
தார்க், கியாண்டு மிடும்பை யில.

பொருள்.

வேண்டுதல்=(ஓர் பொருளையும்) விரும்புதலும்
வேண்டாமை=வெறுத்தலும்
இலான்=இல்லாதவனது
அடி=திருவடிகளை
சேர்ந்தார்க்கு=சேர்ந்தவர்க்கு
யாண்டும்=எக்காலத்திலும்
இடும்பை=பிறவித்துன்பங்கள்
இல=உண்டாவனவல்ல.

தாற்பரியம்.

பிறப்பிறப்புகளுக்குக்காரணமாகிய விருப்பும் வெறுப்புமில்லாத கடவுளடிகளைவிரும்பிச்சேர்ந் தவர்கள் அக்கடவுள்போலவே, பிறப்பிறப்புகளை யடையாமல் நித்தியானந்த சொரூபத்தை யுடை யவராவார்கள்.

சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என் னும் முக்கருமங்களால்வரும் பிறப்புஇறப்பு இர ண்டும், ஆன்மாக்கட்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுப்பன. இவ்விரண்டும் அணுகாதவனே கடவுட் டன்மையைப் பொருந்துபவ னுவான்.

இருள்சே ரிருவினையும் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு,

பொருள்.

இறைவன்=தலைவனது
பொருள்சேர்=மெய்ம்மைசேர்ந்த
புகழ்=கீர்த்தியை
புரிந்தார்மாட்டு=விரும்பினவரிடத்து
இருள்சேர்=மயக்கத்தைப்பற்றி வருகிற
இருவினை=இரண்டு வினைகளும்
சேரா=உண்டாகாவாம்.

தாற்பரியம்.

கடவுளுடைய உண்மையாகிய மகிமைகளை யே விரும்பி யிருப்பவர்கட்கு, உலகமயக்கால் வரும் நல்வினை தீவினையென்னு மிரண்டும் உண் டாகா. எனவே, அஞ்ஞானத்தின் மயங்கிக் கிட ப்பதால் தீவினையும், அவ்வஞ்ஞானத்தைக் கட ப்பதால் நல்வினையும் உண்டாதலால் அவ்விரு வினைகளையும் ஒழிக்கும்பொருட்டு தத்துவ சொ ரூபனுகிய உண்மைக் கடவுளை வணங்கவேண்டு மென்பதாம்.

ஔவையார் நீதிவாக்கியம்.

(ருஉ - ம் பக்கத் தொடர்.)

சீர்மை மறவேல்.

சீர்மை=புகழை
மறவேல்=மறந்துவிடாதை.

கருத்து.—புகழின் பண்பாகிய மெய்க்கீர்த்தி யடைவதை மறந்துவிடாதே யென்பதாம்.

குறளுதாரணம்.

நத்தம்போற்கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

பொருள்.

வித்தகர்க்கு=திறமையை உடையவர்க்கு
அல்லால்=அல்லாமல் (மற்றவர்க்கு)
நத்தம்=(புகழுடம்பிற்கு) பெருக்கமாகும்
கேடும்=வறுமையும்
அரிது=இல்லை
உளதாகும்=(அப்புகழுடம்பு) நிலைபெறுவ தாகும்
சாக்காடும்=மரணமும்
அரிது=இல்லை.

கருத்து.—அறிவில்லார்க்குப் புகழுடம்பிற் குப் பெருக்கமாகும் வறுமையும், அவ்வுடம்பு நிலைபெறுவதாகு மரணமுமில்லை யென்பதாம்.

சுளிக்கச்சொல்லேல்.

சுளிக்க=கேட்போர் வெறுக்கும்படியாக
சொல்லேல்=சொல்லாதை.

கருத்து.—குன்றக்கூறல்முதலியபத்துவகைக் குற்றங்களுட்பட மற்றவர் வெறுக்கும்படியாகச் சொல்லாம லிருக்கவேண்டு மென்பதாம்.

குறளுதாரணம்.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளா
ரும், வேட்ப மொழிவதாஞ் சொல்.

பொருள்.

கேட்டார்=(நட்பா) யேற்றுக்கொண்டவரை
பிணிக்கும்=கட்டும்
தகை=குணங்களை
அவாய்=அவாவி
கேளாரும்=(மற்றப்பகையா)யேற்றுக்கொள் ளாதவரும்
வேட்ப=விரும்பும் வண்ணம்
மொழிவது=சொல்லப்படுவதே
சொல்=சொல்லாம்.

கருத்து.—சிநேகமாய்க்கேட்பாரும், பகையா ய்க்கேளாதவரும் பின்பு நட்பை விரும்பும்பொ ருட்டு மொழிவதே நன்மையாகும்.

கட்டுக்கதைகள்.

முயல்களும், தவளைகளும்.

ஒருகாலத்தில் முயல்கள் தங்கள் நிலைமையில் வெறுப்படைய, அவைகளிலொன்று இவ்விடத்தில் நமக்கு மனிதர்கள், நாய்கள், கூளிகளன்றி, இன்னம் எத்தனைச் சத்துருக்க ளிருக்கின்றார்களோ தெரியாது. நாமெப்பொழுதும் பயத்திலிருப்பதைவிட ஏககாலத்தில் இறப்பதே நன்மையா யிருக்கின்றதாகக் கருதுகிறேனென, அக்கருத்து வலியுறுத்தித் தர்க்கிக்கப்பட்டு உடனே தண்ணீரில் முழுகிவிடுகிறதென்று சம்மதித்துத் தீர்மானஞ்செய்துகொண்டதுகள். இத்தீர்மானம் ஆனவுடனே அடுத்த ஒருதடாகத்தினிடத்திற்குச் செல்ல, அதுகளின் திவரத்தினாலும் கூச்சலினாலும் தவளைக்கூட்ட முழுமையும் அவைகளுக்கஞ்சி கரையிலிருந்து ஜலத்திற் குதித்தன. அப்போது அக்கூட்டத்தில் மிகுந்த ஆலோசனையுள்ள ஒரு முயலானது, பாருங்கள்! நாம்கொஞ்சம் பொறுப்போம், நம்முடைய நிலை நாம் நினைத்ததுபோல சுத்தமாய்க் கெட்டதா யில்லையென்று எனக்குத் தோற்றுகின்றது. ஏனெனில், நாமிதராளுக் கஞ்சுவதுபோல நமக்கஞ்சுகிற செந்துக்களும் இதோ இருக்கின்றன. அதை நீங்கள் பாருங்களென்றது.

நீதி.

அவரவர்கட்குக் கிடைத்த நிலைமையை சந்தோஷமாகக் கொள்ள வேண்டு மென்பதாம்.

கோநாயும், ஆட்டுக்குட்டியும், வெள்ளாடும்.

ஒருநாள் காலையில் ஒருவெள்ளாடு வெளியிற் போகும்போது தான் மறுபடியும் வருகிற பரியந்தம் ஒருவருக்குங் கதவைத்திறவாதே யென்று தன்குட்டிக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டு, அது கண்ணுக்கெட்டாத தூரத்திற் போனவுடனே, அக்கட்டளையை யுற்றுக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கோநாயானது மாறுபாடான தொனியோடு, உன்தாய் நான் என்னை உள்ளேவிடென்று குட்டியைக் கூப்பிட, அக்குட்டி இத்திருட்டை யறிந்து உன் தாடியைக் காண்பிப்பா யாகில் உனக்குக் கதவைத்திறப்பேனென்றது.

நீதி.

கள்ளவேஷக்காரர்கள் என்னமாறுபாடு பண்ணபோதிலுஞ் சில அடையாளங்களினால் அவர்களை அறிந்துகொள்ளலாம்.

சிறுமிகள் விளையாட்டுக் கொம்மி.

சததனு வுபாக்கியானம்.

கொம்மியடிப்பெண்காள் கொம்மியடி கரங்
கூப்பிக்கொம்மி யடியுங்கடி
நன்மைசேர் * ஜய மணிக் காதைதன்னை
நடித்துக்கொம்மி யடியுங்கடி தினம்
படித்துக்கொம்மி யடியுங்கடி. (1)

வேதக்கடலில் விளையாடும் ஞான
வித்தைக்குரிய வித்தாகும்
நாதனயஞ்வி லுறைவாணிபதம்
நண்ணிக்கொம்மி யடியுங்கடி துதி
பண்ணிக்கொம்மி யடியுங்கடி. (2)

நாரணன்மார்பிற் குடிகொள்ளும் அஷ்ட
நாயகிலட்சுமி யெப்போதும்
பாரணிநம்மிடர் தீரப்பதமலர்ப்
பதித்துக்கொம்மி யடியுங்கடி கூடிக்
குதித்துக்கொம்மி யடியுங்கடி. (3)

சிவனிடமிடப் பாகமமரும் நல்
தேவிபார்வதி யாள்நமக்குப்
பவந்தீரஞான மருள்வேத்திப்
பார்த்துக்கொம்மி யடியுங்கடி கால்
பேர்த்துக்கொம்மி யடியுங்கடி. (4)

முன்புகம்பகச் சததனுமன்னன்
முதியோர்புகழ வரசாண்டான்
அன்புமிகுஞ்சய மணிதேவியாக
அழகுபூங்கொடி வாய்த்திருந்தாள். (5)

நித்தங்காலையி லெழுந்துகுளித்து
நியமம்யாவு முடித்திடுவாள்
கத்தனைத்துதி செய்துவணங்கிபின்
கணவனைமெல்ல வெழுப்பிடுவாள். (6)

பூசைதிரவியஞ் சேர்த்துபின்னுணவும்
புரியதாதிகட் குரைத்திடுவாள்
ஆசையுடன்மன்னன் இராசசபையேக
அமைச்சனைப்போலத் தூண்டிடுவாள். (7)

கணவனுக்கேற்ற தருமஞ்செய்வதால்
கண்டோர்பதிவிர தையெனவே
குணம்நிறைந்த பதிமனங்கோணமல்
கூடிப்பிரியாம லேயிருப்பாள். (8)

அரசன்மகிழ்ந்து ஜபவோமதான
வர்ச்சனைநல்லுப வாசமொடு
பிரஜைகளைக்காத்து நீதிவழிநின்று
பெருமானையாரா தித்திடுவான். [வரும்.] (9)

* சயிப்பியை என்று புராணங் கூறுகிறது.